உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்
திங்கள் வெளியீடு.

துணர் ௰உ. { தாது, கார்த்திகை } மலர் ௪

க. கருவிலே வாய்த்த திரு 265
வித்துவான். ஔவை. சு. துரைசாமிப்பிள்ளையவர்கள்

உ. காலவாராய்ச்சி 270
திரு. கோமான். ம. வி. இராகவன் அவர்கள்

௩. நெடுந்தொகைக் குறும்பொருள் 278
வித்துவான். சு. மாணிக்கவாசகமுதலியாரவர்கள்

௪. எண்ணெயும் தண்ணீரும் 287
திரு. அ. சிதம்பரநாதஞ்செட்டியாரவர்கள் B.A.,

௫. சில செய்திகள் 294
திரு. T. V. சதாசிவப் பண்டாரத்தாரவர்கள்

௬. மதிப்புரை 302

௭. நன்கொடைகள் 303
பொழிற்றொண்டர்

செந்தமிழ்ப்புரவலர்,

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பொழிற்றொண்டர்.

தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகம், கரந்தை.

உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௰உ	தாது, கார்த்திகை	மலர் ௮

உ

கருவிலே வாய்த்த திரு

பண்டிதர். திரு. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளையவர்கள்,
தலைமைத்தமிழாசிரியர், உயர்தரக்கல்லூரி, திருவோத்தூர்

(முற்றொடர்ச்சி துணர் 12 மலர் 7 பக்கம் 256)

உயிர்நூலாராய்ச்சியாளர்கள் இதுகாறும் ஆராய்ந்து கூறப் பட்டவற்றால் பறவைகள் மிக்க நுண்ணிய பொறியுணர்வுடையன என்பது தெரிகிறது. ஏனைய உயிரினங்களைநோக்க, பறவையின் பொறியுணர்வு சிறந்ததென்றே ஒரு சிலர் கூறுப. நாகரிகக் குறைவுடைய மக்கள் வாத்து, கோழி முதலியவற்றைத் தங்கள் உறைவிடங்களில் மிகுதியாக வைத்து வளர்ப்பர். ஆஸ்திரேலி யாவில் வாழும் மக்கள் இவ்வாறு வைத்திருப்பதைக் கண்ட காப்டன் ரெயினால்ஸ் (Reynolds) என்பவர், அவர்களைக் கார ணம் வினவ, அவர்க்கு அவர்கள் பகைவர் வரவை முன்னறிந்

துணர்த்தும் முதுக்குறைவு அவற்றின்பால் உண்டு என்று கூறினராம். பகைவர்கள் சேய்மையில் வரும்போதே அவர் வரவினால் எழும் ஓசையை முன்பேகேட்டு, அப்புள்ளினம் சிலைக்கத் தொடங்கும்; அதனைக் கேட்டு நாய்கள் குரைக்கும்; அதனால், அவற்றையுடைய மக்கள் தம்மைக் காத்துக்கோடற்கு வேண்டுவனவற்றை விரைவில் செய்து கொள்வர். நடந்த "மகா யுத்தத்தில்", பிரஞ்சுக்காரருடைய கோட்டைகளுள், ஏபல்டவர் (Eiffel Tower) என்ற விடத்தில் வளர்க்கப்பட்டு வந்த கிள்ளைகள், வான விமானங்கள் மக்கள் கண்ணுக்கும், கண்செய் பொறிக்கும் (Observers) புலனாவதற்கு முன்பே, தமது ஒள்ளிய செவிப் புலனால் இனிதுணர்ந்து அஞ்சி இரைச்சலிடத் தொடங்கினவாம். டாகர் பாங்க் (Dogger Bank) என்னுமிடத்தில் 1915 ஆம் யாண்டில் நடந்த கடற்போரில் இருநூற்றுப் பதினறு மைல் தூரத்துக்கப்பால் இருந்த சிறு பறவைகள், துப்பாக்கிகளின் வெடிப்போசை கேட்டுச் சிலம்பின என்று குறித்திருக்கின்றனர். அருகிலிருந்த மக்களுள் ஒருவரேனும் அப்போர் முழக்கத்தைக் கேளாதிருக்கவும், இப் பறவைகள் அவ்வோசையினைக் கேட்டுப் பேராவாரம் செய்தன என்பதைச் சிறிது நினைத்துப் பார்க்கின், நுண்ணிய செவிப்புலனுடைமையும் இவற்றிற்குக் கருவிலே பரமனருளால் வாய்த்த திரு என்பது விளங்கும்.

இவ்வாறு பறவைகள் நேரிய செவிப்புலன் உடையவாதலோடு மிக்க சீர்மையும் கூர்மையுமுடையகட்புலனும் உடையவாமென்பது உயிர் நூலாராய்ச்சியால் அறியப் பட்டிருக்கிறது. அவற்றின் கண்கள் தலையின் இருபக்கத்திலும் நிற்றலின், அவற்றின் இருபார்வையும் நடுநிலைக்கண் ஒன்றும் (Focus) தகுதிப்பேறு பெற்றில. நமது முகத்துக் கண்கள் நேர்முகமாக நின்று பொருளைப் பார்க்குமிடத்து நடுநிலைஒற்று (Focus)பெறுமாறு அமைந்துள. அதனால் நாம் இருகண்களாலும் ஒரு பொருளையேநோக்கும் தகுதிப்பேறு உடையேமாயினேம்; கண்களும் நிலைபெயராது நின்றாங்கு நோக்குகின்றன. பறவையின் பார்வையோவேறுபட்டுளது;ஒருகண்ணால்ஒருபொருளைநோக்கு

மிடத்து மற்றொருகண் செயலின்றித் தாழ்ந்துவிடுதலும். மூடப் பெறுதலும்உண்டு. ஒருகட்பார்வை நிகழுமிடத்துக் காக்கைக்கு, மற்றைக்கண் மூடப்படுதல் உண்மை கண்ட திருக்கோவை யுடையார், "காகத் திருகண்ணிற் கொன்றே மணிகலந்தாங்கு இருவர் ஆகத்துள் ஓருயிர் கண்டனம்யாம் இன்று" (71) என்று கூறியருளினர். இவ்வாறுவேறுபடும் இக்கண்கள், நேர்பொருளை ஆழ்ந்துநோக்கற்கண், தம்மிற்றாமே ஒப்பஅமைந்துகொள்ளும். இதனை நெடிதாய்ந்தறிந்த வில்லியம் பீபீ (William Beebe) என்பவர், "பறவையின்கண் ஒருசிறுபொழுதிற்குள் தூரதிட்டி யிலிருந்து சூக்குமதிட்டி யாகவும், சூக்குமத்திலிருந்து தூர திட்டியாகவும் மாறுவது இயல்பாகக் கொண்டு விளங்குகிறது," என்று துணிந்து கூறியுள்ளனர். இதனாற்றான் விரைந்துபறக்கும் வன்மையினையுடைய பருந்து, கழுகு முதலியன, வானத்தே மிக்க உயரத்தே பறக்கும்போதே தரையில் நகர்ந்து செல்லும் சிறுபூச்சியினையும் கட்புலனால் தெரிந்து ஞரேலெனப் பாய்ந்து பற்றுதலும், இவற்றின் வரவினைக் கோழிகள் முன்னறிந்து தம் பார்ப்புக்களைப் புறங்காத்தலும் செய்கின்றன. மணிக்கு எண்பதுமைல் வீதம் பறந்தேகும் புள்ளினம், தரையில் குண்டூசியின் நுனியளவிற்றாய பூச்சியினையும் காண்டலும், கண்டாங்குக் குறிதவறாது அதன்மேற் பாய்ந்து கவர்ந்தேகுதலும் செய்கின்றன. இன்னோரன்ன திருவுடைக்காட்சி யுணர்வு, இவற்றிற்குப் பரமன் திருவருளால் கருவிலே வாய்த்துளதெனக் கூறுவதல்லது பிறிதியாதும் கூறுதற்கில்லை.

பறவைகளின் சிறப்பியல்புகளை ஆராயப்புகுந்த அறிஞர் பலரும் வேறுபுலம் பெயர்தல் (Migration) என்னும் செய்கை யொன்று பறவைகளின்பால் சிறந்து நிற்கிறதென்கின்றனர். இதனைப் பண்டைக்காலத்துத் தமிழறிஞரும் அறிந்திருந்தனர். "வெள்ளமும் பறவையும் விலங்கும் வேசையர், உள்ளமும் ஒரு வழி ஓட நின்றவன்" என்று கூறும் கம்பர் மொழியின்கண், பறவையின் சிறப்பியல்பு உணரப்பட்டமை நாம் உணர நிற்கின்றது. பறவைகள் ஒருசில பருவகாலங்களில் ஓரிடத்திலும், வேறு காலங்களில் வேறிடங்களிலும் காணப்படுவதுண்டு.

தமக்கு உரிய இரைப்பொருள் கிடைத்தற்கு அமைந்த காலங்களில், அக்கால நிகழ்ச்சியுள்ள இடத்தில் இருப்பதும், இல்வழி வேறிடத்துச் செல்லுதலுமாகிய இச்செய்கையியல்பே வேறுபுலம் பெயர்தல் எனப்படுகிறது. பருவ வரவு தேர்தலும், தேர்ந்து செய்வன செய்தலும் கூரிய உணர்வுடையுயிர்கட்கே ஒல்லும் செய்கையாகும். அவ்வியல்பினுல், பறவைகள் வேறுபுலம் பெயரும் இயல்பினவாதற்குக் காரணம் யாதாகும் எனச்சில அறிஞர் ஆராய்வாராயினர். அவருட் பலரும், "பருவ வரவின்கண், பறவைகளின் யாக்கையமைப்பில் எழும் சில ரசாயனக் கிளர்ச்சியே, வேறுபுலம் பெயர்தற்கு ஏதுவாகும்" என்கின்றனர். (Scientists generally accept the theory that these seasonal flights are the result of some chemical distarbance in the bird itself) இதனுற்றான், வீடுகளில் கூடமைத்து வளர்க்கப் பெறும் பறவையினமும் அவ்வப் பருவ வரவின்கண் அமைதியின்றி அலைப்பும் சிலைப்பும் கொள்கின்றன என்றும் கூறுப.

இவ்வண்ணம் பருவ வரவு தேர்ந்து வேறுபுலம் படரும் பறவைகளின் செலவினைச் சிலஅறிஞர் ஆராய்ந்து வருகின்றனர். இவ்வாராய்ச்சியின்கண் அரிய செய்திகள் பல அறியப்படுகின்றன. தாட்டரல் (Dotteral) என்னும் பறவை மாலையில் வடவாப்பிரிக்காவில் உணவுகொண்டு, மறுநாட்காலையில் ஸ்காந்திநேவியக் கடற்கரையில் (Scandinavian shores) இரைதேர்ந்துண்டு இன்புறுகிறது. திரசி (Thrush) என்னும் புள்ளினத்துள் சாம்பல் நிறமுடையவை, எப்பிரல்திங்களில் வடஅமரிக்கநாட்டு ஐக்கியமாகாணத்தின் தென்பகுதியில் தங்கி, ஒருதிங்கட்குபின், அலாஸ்கா என்னும் நாட்டையடைகின்றன. அவற்றின் செலவு நாளொன்றுக்கு 130 மைல் ஆகிறதெனக் கணக்கிட்டிருக்கின்றனர். அந்நாட்டுப் பறவைகளுள் இராபின் (Robin) என்பது நம் நாட்டுக் காக்கையைப் போல ஆங்காங்குத் தங்கி இரைகொள்ளும் இயல்பிற்று. வேறுபுலம் பெயரும் விரகின்கண், அஃது வடவமரிக்காவின் வடபகுதியினைச் சாரச்சார, நாளொன்றுக்கு பதின்மூன்றுமைல் விழுக்காடு செலவுகொண்டு, பின்பு மின்னஸ்டோவா (Minnestoa) என்னும் இடத்தினைக் கடந்ததும்,

அலாஸ்கா நாட்டை நோக்கி, ஏனைப் பறவை யினத்தோடு கூடி, மணிக்கு எழுபது மைல் விழுக்காடு செலவு பெற்றுச்செல்கிறது.

இனி, இவ்வண்ணம் வேறுபுலம் பெயரும் விரகுடை உயிர்கட்குத் திசைநிலை காட்டுவது யாதாகும்? பரந்த கடலிலும், விரிந்த மணற்பாலையிலும், உறைந்த பனிவெளியிலும் விரைந்து பறந்தேகும் புள்ளினங்கள், தாம் படர்ந்துசெல்லும் நாடு இருக்கும் திசை தப்பி மயங்கி விடுகின்றனவா? இல்லையே! தாம் படர்ந்த நாட்டைத் தப்பாது சென்றடைதலின், இவற்றிற்குத் திசைகாட்டிநிற்கும் திருவுடைக் கருவியாது கொல்லோ? இவை செல்லுநெறியில், பிழையாது சேறற்கண் துணைபுரிதற்கு யாதானுமொன்று இருந்தே தீர்தல் வேண்டுமன்றே! அக்கருவியின் முன்,-அத்திப்பியக் கருவியின்முன்,-மனிதவுணர்வால் செய்யப்பட்ட செயற்கைத் திசையறி கருவி முன்னிற்றல் கூடுமா? கூடாது, கூடாது. இயற்கை வழியியங்கும் இயல்புடைக்கருவி முன், செயற்கை வழி இயலும் செய்வினைக்கருவி யாது செய்யவல்லதாம்?

மேலே அமரிக்காவில் வாழும் புலாவர் (Plover) என்னும் பறவைகள் அலாஸ்கா நாட்டிலிருந்து தெற்குநோக்கி அலூஷியன் தீவுகட்குச் செல்கின்றன. அவற்றின் எதிரே பசிபிக்கென்னும் பரந்த பாய்திரைப் பெருங்கடல், மாசு மறுவின்றி, நாற்றிசையும் தன் பரப்பே தோன்ற, கருநிறங் காட்டிக் கலக்கமின்றிக் கிடக்கின்றது. பின்பு, அதன் நடுவே ஒருபுறத்தே, நீலப்பெரும் புடவையின் ஒருபுறத்தே வெண்ணித்திலம் பதித்தாற்போல ஹாவாய் (Howai) என்னும் சிறிய தீவு காணப்பெறுகிறது. அச்சிறு நிலப் பகுதியினை நோக்கி இப்பொன்னிறப் புலாவரினம் படர்ந்து வருகின்றது! அட்லாண்டிக் என்னும் பெருங் கடற்கரையில் வாழும் புலாவரினங்கள் நோவாஸ்கோஷியாவிலிருந்து, தரையைத் தீண்டாமலே தென்னமரிக்காவின் தென்பகுதியினை யடைகின்றன. அடைபவை திரும்புகாலையில் வேறு வழியைத் தொடர்ந்து வருகின்றன; மிசிசிப்பி நதிபாயும் வளநாட்டின் வழியே படர்ந்து, உள் நாட்டைக் கடந்து, வடகடற்கரையை யடையும். ஆர்க்டிக் உலகத்தில்

தான் (Tern) என்னும் பறவைகள் வாழ்கின்றன. வடதுருவத்தைக் காணப்புகுந்த வீரர்கள், தாம் இவற்றின் கூடுகளை வட துருவத்துக்கு நானூற்றைம்பது மைல் தூரத்தே கண்டதாகக் கூறிகின்றனர். அங்குள்ள இவை மாரிக்கால வரவு தேர்ந்து, பதினோராயிரமைல் தூரத்தில் உள்ள தென் துருவ அன்டார்க்டிக் உலகுநோக்கிச் செல்கின்றன. இவ்வரிய காரியத்தை இவை எவ்வண்ணம் செய்கின்றன? இச்செயற்கண் இவை பிழையின்றி ஒழுகுதற்குத் துணையாவது யாது? இவையாவும் இவற்ருல் இயல்பாகவே நடைபெறுவன; இஃது இவற்றிற்குக் கருவிலே வாய்த்ததிரு என்பதல்லது பிறிதில்லை.

இனி, அடுத்த கட்டுரையில் வடகடற் பறவைகள் என்னும் பொருள்பற்றி, ஸ்மித்ஸோனியன் ஆராய்ச்சிக் கழகத்துத்துணையமைச்சராக இருக்கும் அலக்சாண்டர் வெட்மோர் Alexander Wetmore Asst. Secretary Smithsonian Institution N. America என்பார் எழுதிய கட்டுரை தமிழில் வெளிவிடப்பெறும்.

காலவாராய்ச்சி

கோமான். ம. வி. இராகவன் வித்துவான்
ஔவைத்தமிழகம், திருவத்திபுரம்

(முற்றொடர்ச்சி துணர் 12. மலர் 7. பக்கம் 263.)

IV

இனி, அடியார்க்குநல்லார், பேரிலக்கியமாகிய திருக்கோவையாருரைகண்ட பேராசிரியருக்குப் பிற்பட்டவர் என்பது நிறுவுவார், "அடியார்க்குநல்லார், 'கொன்றையன்'' என்புழிப் போல என்று திருக்கோவையுரையை ஆட்சி கொண்டாராகலின் திருக்கோவை யுரையாசிரியர் அடியார்க்கு நல்லார்க்கு முற்பட்டவராவர்' என்று முடிக்கின்ருர்,

இதில், ஆசிரியர் மேற்கோளாகக் காட்டிய கோன்றையன் என்பது கோவையாரிலுள்ளதேயோ; பிற நூல்களிலுள்ள தேயோ; கோவையாரி லுள்ளதே யெனினும், "தேனக்க கோன்றையன்" (159), "தாருறு கோன்றையன்"(*176), "தேன் வண்டுறைதரு கோன்றையன்" (380), "தாரணி கோன்றையன்" 400) எனப் பலபாக்களில் அக் கோன்றையன் என்பது வந் திருத்தலின் இக்காட்டியது எப்பாவினதோ என்பனபோல்வ ஆராய்தற்குரிய.

இவ்வுரையாசிரியர், "இளையார் விளையாட" என்றார் சிந்தா மணியினும், "கூம்புவிடு முழுநெறி" என்றார் புறப்பாட்டினும், "வான்கேழ் வட்டம்" என்றார் நெடுநல் வாடையினும், என் பனபோலப் பெரும்பான்மையும் தாம் எடுத்துக் காட்டும் மேற் கோள்கள் இன்னவின்ன நூலின் கணுள்ளனவென்று நூற் பெயர் கூறிக்காட்டியும், சிறுபான்மை, "வெப்பின் பழச்சுளை" என்றாகலின், "நீர்முற்றி மதில் பொருஉம்" என்றார் பிறரும், என்பனபோல நூற்பெயர் கூறாது பிறராற் கூறப்பட்டதென் பது மாத்திர மறியவைத்தும், சிறுபான்மை, "கோயில் போல நின்றது", எனப் பிறரால் கூறப்பட்டது பின் இவரானெடுத் துக்காட்டப்பட்டதா, அல்லது இவரே காட்டியதா என்பன போல்வ அறியலாகாவகையில் வாளா கூறியும் சேறல் வழக் குடையராதல் இவருரையா னறியக்கிடக்கின்றது. இறுதியிற் காட்டப்பட்டுள்ளவகையில் இவரானாட்சி கொள்ளப்பட்டுள்ள மேற்கோள் மொழிகளுள் பல பிற நூல்களிலுள்ளனவாகவும், சில தொல்காப்பிய வுரையாசிரியர்களான் காட்டப்பட்டுள்ள உதாரண மொழிகளாகவும், சில வழக்குச் சொற்களாகவும் காணப்படுகின்றன. அங்ஙனமாக, இயைபு நோக்காது அவை யிற்று இஃதிஃ தின்னவின்ன நூலினின்றும் எடுத்தாளப் பட்ட தெனத் துணிந்து கூறுதல் பொருந்துவ தொன்றன்றாம்; அக் காட்டிய மொழி பிறிதொரு நூலின்கணுள்ள தெனினும், அந் நூலுரைகாரர் கொண்ட பொருளிலேயே அம்மொழி இவ் வெடுத்துக் காட்டிய ஆசிரியராற் கொள்ளப்பட்டதென ஒரு தலையாற் கோடலும் ஒல்லுவதன்றாம்; ஒருகால் அங்ஙனங்

கோட லொல்லுவதெனினும் அவ்வெடுத்துக் காட்டே யேது வாக அவ்விருவருள் ஒருவரினொருவர் முற்பட்டவர் பிற்பட்டவ ரென்பது போன்ற முடிவு கொண்டு கூறுதல் நேரிய முறை யாகாதாம்.

அற்றாக, "சினையலர் வேம்பன்" எனவரும் கொலைக்களக் காதையடியில் (149), வேம்புமாலையைக் குடிக்குரிய வடை யாளமாலையாகவுடைய பாண்டியனைக் குறிப்பதாகிய அத்தொட ருக்குச் "சினையலர் வேம்பன்" என்றே பொருள்கூறி, விசே டங் கூறுவார், "சினை=கொம்பு. அலர் வேம்பு—வேம்பல ரென்க; ஆகு பெயரான் மாலையாயிற்று," என்று விளக்கி, "வேம்பன், "கொன்றையன் என்பது போல நின்றது" என்று காட்டினர் ஆசிரியர். இக்காட்டிய கொன்றையன் என்பது திருச் சிற்றம்பலக் கோவையாரின் நானூறாவது செய்யுளின் மூன்றாவ தடியில் வரும், "தாரணி கொன்றையன்" என்றதிலுள்ள கொன் றையன் என்பதென்று கொண்டு, அதுவே ஈண்டு அடியார்க்கு நல்லாரால் காட்டப் பட்டுளதென்றும், அச்சொல் அந்நூலுரை காரர் கூறிய பொருளிலேயே அடியார்க்கு நல்லாரான் ஆட்சி கொள்ளப் பட்டுள்ளதென்றும் மயங்கி, அதனை யேதுவாக்கிக் கொண்டு கோவை யுரைகாரருக்குப் பிற்பட்டவர் அடியார்க்கு நல்லாரென முடிவு கொள்வாராயினர்.

கோவையார் நானூறாவது செய்யுளில் வரும் அக்கொன்றை யன் என்பது ஆண்டுப் பாட்டுடைத் தலைவராகிய சிவபெரு மானை யன்றிக் கிளவித் தலைவனைக் குறித்தலின், அந்நூலுரை கண்ட பேராசிரியர் ஆண்டு அச்சொற்குக் "கொன்றைப் பூவின் தன்மையன்" என்று பொருள் கொண்டுள்ளனர். அங்ஙனம் அக் கொன்றையன் என்பதனையே, அப்பொருளிலேயே ஈண்டு அடியார்க்குநல்லார் காட்டினாராயின், ஈண்டு, "வேம்பன்" என்ப தற்கு வேம்பின் தன்மையை யுடையவன் என்பதே ஆசிரியர் கொண்ட பொருளாதல் வேண்டும். வேண்டவே, அங்ஙனம் ஒருசொற்கு வெளிப்படையாக இனிது விளங்காத குறிப்புப் பொருள் கொள்வழியும், பிறிது பொருள் கூறியதனை நிறுவும்

வழியெல்லாம், "வெப்பு-தொழு நோய்; "வெப்பின்பழச்சுனை" என்றாராகலின்; ஆடுதல்-அனுபவித்தல்; "இளையார் விளையாட" என்றார் சிந்தாமணியினும்; முதிர்தல்-முற்றுதல்; சூழ்தலுமாம்; "நீர்முற்றி மதில் பொருஉம்" என்றார் பிறரும்; கறை-கடமை; "கறை பன்னீராண்டுடன் விடுமின்" என்றார் சிந்தாமணியினும் பகல்-அரையாமம்; "மற்றையாமம் பகலுறக்கழிப்பி" என்றார் மதுரைக்காஞ்சியினும்; மண்-ஈண்டுச்சுதை; "மண்ணேடியைந்த மரத்தனையர்" என்றாராகலின்; நிழல்-ஒளி; "நிழல்மணி" யென்றார் பிறரும்; பணித்தல்-அருளிச்செய்தல்; திசைச்சொல்; "மண்டலமேபணியாய்" என்பதுபோல; என்பனபோலத் தாம்கொள்ளும் பொருளை முன்னர்க் கூறிப் பின்னரே மேற்கோள்காட்டும் வழக்குடைய ஆசிரியர், அச்சொற்கு அங்ஙனம் எளிதினுணர்தலாகாத அக்குறிப்புப் பொருளேகொண்டிருப்பின் வேம்பன்-வேம்பின் தன்மையன்; "கொன்றையன்" என்பதுபோல; என்றன்றே கூறியிருப்பர். பிறநூற் பயிற்சியின்றி இந்நூல் கற்றலுறுவார்க்கும் மயக்கமு மிடர்ப்பாடு மெய்தாவகையாளினிது பொருள் விளங்க விரித்துக்கூறும் கருத்தினராய விவ்வாசிரியர், வேம்பன் என்பதற்கு நயங்கருதிப் பிறிது பொருள்கொண்டவர், அதனை வாசகர் எளிதினுணருமாறு உரையகத்து விளங்கக் கூறாராய், உய்த்துணர்தற்கு மெட்டாவாறு, கோவையாரில் வந்துள்ள கோன்றையன் என்பதற்குப் பேராசிரியர் கூறியுள்ள பொருள் கண்டுகொள்கவென்னுங் கருத்தாற் கோன்றையன் என்பதை யெடுத்துக் காட்டி, அதனையும், இந்நூலினுள்ளதென்றுதல், இப்பாவினுள்ளதென்றுதல் கூறலராய் வாளா விடுத்துச் செல்வர்கொல்? அக்கோவையாரில், "தேனக்க கோன்றையன்," "தாருறு கோன்றையன்," "தேன்வண் குறைதரு கோன்றையன்" (159, 176, 380) என்பனபோல வேறு பல பாக்களினும் அக்கோன்றையன் என்பது வந்துள்ளமையின் இவற்றுள் எப்பாவின்கண் வந்துள்ள கோன்றையன் என்பது ஈண்டுக் காட்டப்பட்டதோவெனக் கற்பார் மயங்கி யிடர்ப்பட்டு மனம் வருந்தி நிற்கவையார் அந்நல்லார் என ஒரு தலையாற் கொள்க. இது மேற்காட்டிப் போந்தவாற்றான் நன்கு துணிவுறுதலுங் காண்க.

இனி, "வினைவிளை காலமாதலின் யாவதுஞ், சினையலர் வேம் பன் தேரானுகி" (27-8) எனவரும் பதிக வடிகட்கு, "பாண்டியன் தான் முற்பவத்திற் செய்த தீவினை வந்து பலிக்கின்ற காலமாத லாலே ஒன்றையுந் தேரானுய்" என்று இவ்வாசிரியர் பொரு ளுரைத் துள்ளனர். ஈண்டுச் "சினையலர் வேம்பன்" என்ப தற்குப் பாண்டியன் என்றே பொருள் கொண்டுள்ளமை காணப் படுகின்றது. பின்னர், இவ்வடிகட்கு விசேடங் கூறுவார், இதனை ஆராயுநெறி பலவுளவாகவும், அவற்றில் ஒன்றையுந் தேர்ந் திலனேன்பார் யாவதும் தேரானுகியென்றுர்; முன்னர்க் கைகுறைத் தல் முதலிய முறை செய்தோன் இதனைத் தேர்ந்திலனேன்று அடிகள் இரங்கிக் கூறினர். கன்றிய காவலரேன்றுர், அவரும் முன்னர்த் தீது செய்யாரேன்பது தோன்ற" எனச் சொற்றெுறும் இற்றிதன் பெற்றியென்று நயங்கண்டு விசேடம் விளங்கக் கூறு கின்றவர், வேம்பன் என்ற சொற்கு அப்பொருள் கோடற் கருத்தினராயின் வாளாவிடுத்துச் செல்லாரன்றே! "கோன்றை யன்" என்பதுபோல வேம்பன் என்றுர்; இச் செயலாற் பிறர்க் குக்கைக்குந் தன்மைய னுயினனென்பது தோன்ற, என்றன்றே கூறிச் சென்றிருப்பார்.

நிற்க, அக்கோன்றையன் என்ற மேற்கோள் காட்டப்பட் டுள்ள விடத்தும் அங்ஙனம் பொருள் கொண்டு குறித்தில ரென் பது முன்னர்க் காட்டினும். அப்பொருள் கொண்டு குறித்தில ராயினும், அங்ஙனம் கோடற்கேற்ப வேனும் ஆண்டுக் கூறப் பட்டுள்ள பொருள் அமைந்துளதோவெனின், அதுவு மின்று. பதிகத்துக் கூறிய அவ்விரண்டடியும் அவ்வாறே கொலைக்களக் காதை யாகிய இவ்விடத்தும், "வினைவிளை காலமாதலின் யாவ துஞ், சினையலர் வேம்பன் தேரானுகி" (148- 9) என அடிகளா னமைத்துக் கொண்டு கூறப்பட்டுளது. ஈண்டு இவ்வடிகட்கு ஆசிரியர், "சினையலர் வேம்பன்...........வினைவிளைகின்ற காலமாத லானே இதனைச்சிறிதுந் தேரானுய்" என்றே வுரைகூறியவர், பின் சினையலர் வேம்பன் என்ற தொடரை விளக்கலுற்று, "சினை- கோம்பு. அலர் வேம்பு- வேம்பலரேன்க; ஆகுபெயரான் மாலை யாயிற்று" என்ற இத்துணையே கூறுயமைந்தார். இக் கூறிய

விளக்கப்படிச் சினையலர் வேம்பன் என்றது சினைவேம்பலர் எனக் கூடி ஆகுபெயரான் மாலையை யுணர்த்திற் றென்பதும், பின்னர், அது, "கோன்றையன்" என்றாற் போலப் பாண்டியனை யுணர்த் திற்றென்பதும் விளக்க மெய்தல் பெறுதும். பெறவே, வேம் பலர் என்பது ஆகுபெயரான் மாலையாய், பின்னர் அதனைக் குடிக் குரிய வடையாள மாலையாகக் கொண்டு அணிதலுடையானாகிய பாண்டியனைக் குறிக்கும்; கோன்றையன் என்பதில் கொன்றை யென்பது ஆகுபெயரான் மாலையாய், பின்னர் அதனைத் தனக் குரிய வடையாள மாலையாக அணிதலுடை யானாகிய சிவபெரு மானைக் குறித்தல் போல என்பதே ஆசிரியர் அடியார்க்குநல்லார் கருத்தாதல் தெளிவாகின்றது.

அன்றி, கோன்றைப் பூவின் தன்மையன் என்பதுபோல வேம்பலரின் தன்மையன் என்பதே ஆசிரியர்க்குக் கருத்தாயின், வேம்பலர் என்பது ஆகுபெயரான் மாலையாயிற் றென்றலின் பொருந்தாமையும் நுனித்தறிக. வேம்பலரின் தன்மையன் என்றலே பொருந்துவதாக, அதனை ஆகுபெயரான் மாலையாக்கி வேம்புமாலையின் தன்மையன் என்றாரெனின், பொருட் பொருத்த மின்றி வெற்றுரை கூறிய குற்றம் ஆசிரியரைச் சார நிற்றலு முணர்க. துறைபோய வுரையாசிரியராகிய அந்நிறை திருவாளர் அங்ஙனம் குற்றமெய்தக் கூறாரென்ப தொருதலையாமாகலின் அவர்க்கது கருத்தன்மையும் அறிந்துகொள்க.

அற்றேல், ஈண்டு அடியார்க்கு நல்லார் காட்டிய கோன்றை யன் என்பது கோவையார் நானூறாவது செய்யுளில் வந்துள்ளதே யெனக் கொண்டு, அடிக் குறிப்பில் அந்நூற் பெயரையும் அப் பாட்டெண்ணையும் குறித்து, ஆண்டு அச்சொற்கு அந்நூலுரை யாசிரியராகிய பேராசிரியர் கூறியுள்ள பொருளையும் எடுத்துக் காட்டி யுள்ளாரால், சிலப்பதிகாரப் பதிப்பாசிரியரும், பெரும் புலவருமாகிய பிரமஸ்ரீ. மஹாமஹோபாத்யாய. தாக்ஷிணாத்ய கலாநிதி. டாக்டர். உ. வே. சாமிநாதையரவர்களெனின், ஒக்கும். நூற்பயிற்சியும் புலமையும் ஒரு சிறிதும் வாய்க்கப்பெறாத என் போன்றார்க்கும் எளிதின் அறியக்கிடக்கு மிப்பொருந்தா

மையை, பன்னூற் பயிற்சியும், ஆராய்ச்சியும், நிறைந்த புலமையும் வாய்க்கப்பெற்று உரைதர விளங்கு மந்நிறை திருவாளர் அறியாது கூறினரென்ற லறியாமையாம். ஆகவே **கொன்றையன்** என்பதற்கு அப் புதுப்பொருள் கண்டவர், ஈண்டும் அந்நெறியில் **வேம்பலரின் தன்மையன்** என்று பொருள்கோடல் நயப்பாடு சிறக்கும், **வேம்பன்** என எடுத்துக் கூறியுள்ளமையின், எனத் தம் கருத்துப் புலப்படக் கூறியிருத்தல் வேண்டுமன்றி, அஃது **அடியார்க்கு நல்லார்** கருத்தென்பது அவர் கருத்தெனக் கோடல் சாலாதென்க.

இவ்வாற்றான் **வேம்பன்** என்பதற்கு இன்னோரன்னோர் கருதும் பொருள் ஆண்டைக்கும் பொருந்துவ தன்றென்பதும், பின்னால் தம் உரையைப்படிக்கும் மாணவர் மனநிலையை முன்னுணர்ந்து ஏற்ற பெற்றியான் உரைவகுத்தலே உரையாசிரியன்மார்க்குரிய தலைக்கடனாகலானும், கண்டவுடன் எவ்வியல்பினரும் எளிதின் வேம்பு மாலையை யுடையன் எனப்பொருள் கொள்ளற்பாலதான **வேம்பன்** என்ற சொற்குத் தாம் வேறு பொருள் கருதி யிருப்பரேல் அதனை விளங்கக் கூறாது செல்லாராகலானும், ஈண்டு **வேம்பன்** என்பது **வேம்புமாலையையுடையனென உடைமையாற் பெற்ற பெயர்** என்பதே ஆசிரியர் கருத்தென்பதும், ஈண்டுக் காட்டப்பட்டுள்ள **கொன்றையன்** என்பது **கோவையார்** நானூறாவது செய்யுளின் மூன்றாவதடியில் வரும் "*தாரணி கொன்றையன்*" என்பதிலுள்ள **கொன்றையன்** என்பதேயென ஒருதலையாகக் கொள்ளலாகாதென்பதும், அந்நூற்கண்ணே பிறபாக்களில் உடைப் பெயராக வந்துள்ளனவற்றுளொன்றேயாதல், அஃதொழிந்த ஏனைய பண்டைப்பெருநூல்களுள் யாதானுமொன்றில் அப்பொருளில் வந்துள்ளனவற்றுளொன்றே யாதல் வேண்டுமென்பதும் போல்வன ஆராய்ந்து விளக்கப் பட்டன. படவே, **அடியார்க்கு நல்லார்** காட்டிய **கொன்றையன்** என்பது **கோவையார்** நானூறாவது செய்யுளில் வந்துள்ளதே யென்பதும், அஃது அந் நூலுரையாசிரியராற் கொள்ளப்பட்ட பொருளிலேயே **அடியார்க்கு நல்லாரான்** ஆட்சி கொள்ளப் பட்ட தென்பதுமாகிய ஏதுக்கள் மறுக்கப்பட்டமை

யான், அவற்றாற் சாதிக்கப்பட்ட கோவையாருரையாசிரியர் அடியார்க்கு நல்லாரின் முற்பட்டவரென்னுஞ் சாத்தியமும் மறுக்கப் பட்டதாயிற்று.

ஆராய்ச்சி நெறிக்குமாருக, திரு. அய்யங்காரவர்களான் மேற்கொள்ளப் பட்டுளதாகிய மேற்கோளாட்சிகொண்டு காலங் கணிக்கும் முறை பற்றி நோக்குவார்க்குச் சிந்தாமணி, கலித்தொகை, பத்துப்பாட்டு முதலியவற்றிலிருந்து ஆசிரியர் நச்சினார்க்கினியர் கொண்ட பொருளிலேயே பல சொற்களும், தொடர்களும், திருக்குறளிலிருந்து ஆசிரியர் பரிமேலழகர் கொண்ட பொருளிலேயே பல சொற்களும், தொடர்களும் ஆசிரியர் அடியர்க்குநல்லாரான் மேற்கோளாகக் காட்டப் பட்டிருத்தலின், அவர் அவ்விருவர்க்கும் பிற்பட்டவரென்பது மெய்த்தாமாறறிக. அன்றியும் இம் முறை பெரிதும் ஒன்றையொன்று பற்றுதல் என்னும் குற்றம்பட நிற்றலுங் காண்க. எனவே இங்ஙனம் மேற்கோளாட்சியே கொண்டு ஒருவருடைய காலங் கண்டு நிறுவப் புகுதலாகிய போலி வழக்கினை மேற்கொண்டுழைத்தல் பயனிலுழவேயாய் முடியுமென்க. நியாய நூன் முறையோடு மாறுபடாது தக்க ஏதுவும் எடுத்துக் காட்டுங் கொண்டு ஒன்றைத் துணியும் நேரிய நெறியை விடுத்து, இங்ஙனம் புற்கயிற்றாற் களிறு பிணிக்க முயலுதல் ஆராய்ச்சி நெறியாகாமையும், அதனுல் பொய்ம்மையை மெய்ம்மையெனவும் மெய்ம்மையைப் பொய்ம்மை யெனவும் மயங்குதலின்றி உண்மை காண்டலொருதலையாற் கூடாமையும் உணர்ந்து கொள்க. பிற பகுதி பற்றிய ஆராய்ச்சியும் முறையே பின்னர்த் தொடர்ந்து வெளி வரும்.

நெடுந்தொகைக் குறும்பொருள்

திரு. வித்துவான், மூத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், போர்டு உயர்பள்ளி, ஆரணி.

(முற்றொடர்ச்சி துணர் 12, மலர் 5, பக்கம் 190)

பா. கo. நெய்தல். அம்மூவனார்.

இரவுக் குறி வந்து தலைமகளைக் கண்ணுற்று நீங்கும் தலைமகனை யெதிர்ப் பட்டு நின்று தோழி சொல்லியது.

வான்கடற் பரப்பிற் றூவற் கெதிரிய
மீன்கண் டன்ன மெல்லரும் பூழ்த்த
முடவுமுதிர் புன்னைத் தடவுநிலை மாச்சினைப்
புள்ளிறை கூரு மெல்லம் புலம்ப
நெய்த லுண்கண் பைதல் கலுழப்
பிரித லெண்ணினை யாயி னன்று
மரிதுற் றனையாற் பெரும வுரிதினிற்
கொண்டாங்குப் பெயர்தல் வேண்டுங் கொண்டலொடு
குரூஉத்திரைப் புணரி யுடைதரு மெக்கர்ப்
பழந்திமில் கொன்ற புதுவலைப் பரதவர்
மோட்டுமண லடைகரைக் கோட்டுமீன் கொண்டி
மணங்கமழ் பாக்கத்துப் பகுக்கும்
வளங்கெழு தொண்டி யன்னவிவ ணலனே.

வான்கடல் பரப்பில் தூவற்கு எதிரிய=அழகையுடைய கடலிடத்தே பரந்து கிடக்கின்ற சோலையில் (நீர்த்)துவலையை யேற்ற (புன்னை), மீன் கண்ட அன்ன மெல் அரும்பு ஊழ்த்த முடவு முதிர்புன்னை=விண்மீன்களைக் கண்டாலொத்தமெல்லிய அரும்புகளை உதிர்த்த வளைவாந் தன்மை முதிர்ந்த புன்னைமரத் தின், தடவுநிலை மாசினை=பெருமையைக் கொண்ட நிலையினை யுடைய கரிய கிளைகளில், புள் இறைகூரும் மெல்லம் புலம்ப, பெரும,=புட்கள் தங்குதல் மிகும் மெல்லிய கடற்சேர்ப்ப,

தலைவ, நெய்தல் உண்கண் பைதல கலுழப்பிரிதல் எண்ணினை ஆயின் நன்றும் அரிது உற்றனை=(நீ) [தலைவியின்] நெய்தற் பூப்போலும் மையுண்ட கண்கள் வருத்தமுடையவாய் அழ(த் தலைவியை)ப் பிரிதலை நினைத்தாயாயின் பெரிதும் அரியதனைச் செலுத்துதலுற்றாய், கொண்டலொடு குரூஉ திரை புணரி உடை தரும் எக்கர் பழதிமில் கொன்ற புதுவலை பரதவர்=கீழ்காற் றால் நிறம்பொருந்திய அலைகளையுடைய கடனீர் உடைதலைச் செய்யும் மணல் மேட்டின்கண் பழைய (மீன்பிடி) படகை(ப் பயன்படாதென)க் கெடுத்த புதிய வலையைப் பண்ணும் நெய் தனிலமாக்கள், மோடுமணல் அடைகரை கோட்டுமீன்கொண்டி =உயர்ச்சியையுடைய மணலடைந்த கரையில் சுறாமீன் கொள் ளையை, மணம் கமழ் பாக்கத்து பகுக்கும் வளம்கெழுதொண்டி அன்ன இவள் நலன்=புலால் நாற்றம் வீசும் கடற்கரையூரிற் (பலர்க்கும்) பகுத்தல் செய்யும் வளங்கள் பொருந்தியதொண்டி என்னும் நகரைப் போன்ற இவளுடைய நலம், உரிதினின்= (இவட்கு) உரித்தாக, கொண்டு=(இவளை உடன்) கொண்டு, ஆங்கு பெயர்தல்வேண்டும்=(நின் ஊராகிய) அவ்விடத்துப் போதல் வேண்டும்.

(வரைந்து கொண்டு செல்லல் வேண்டும். அன்றாயின் இறந்துபடும்).

அழகையுடைய கடலிடத்தே பரந்து கிடக்கின்ற சோலைக் கண் நீர்த் துவலையையேற்ற — விண்மீன்களைப் (பார்த்தாற்) போன்ற மெல்லிய அரும்புகளை யுதிர்த்த—வளைவாந் தன்மை முதிர்ந்த புன்னைமரத்தின் பெரியநிற்றலையுடைய கரியகிளைகளிற் புட்கள் தங்குதல் மிகும் மெல்லிய கடற்சேர்ப்ப! பெரும! நீ நெய்தற் பூவையொத்தமையுண்ட (தலைவியின்) கண்கள் வருத்த முடையனவாயழும்வண்ணம்(அவளைவிட்டுப்) பிரிதலைஎண்ணினை யாயின் பெரிதும் அரியதனைச் செலுத்தலுற்றனை. கீழ்காற்றால் நிறமுடைய அலைவாய்ந்த கடனீர் உடையும் மணல் மேட்டின் கண் பழையபடகுகளைக் கெடவிட்ட— புதிய வலையை யுடைய பரதவர் உயர்ந்த மணலடை கரையில் சுறாமீன் வருவாயைப் புலால் நாறுங் கடற்கரைப் பாக்கத்திற் (பலர்க்கும்) பகுத்துக்

கொடுக்கும் வளங்கள் விளங்கும் தொண்டி என்னும் நகரைப் போன்ற இவளுடைய நலம் இவட்கு உரித்தாக இவளை உடன் கொண்டு நின்னூர்க்குச் செல்க. தனியே இவளை விட்டுச் செல் வையேல் இவள் இறந்துபடுவாள். (கலி. 10:— 21.)

தலைவ, நீ தலைவியை வரைந்து கொண்டேகல் வேண்டும். அங்கனமன்றி இவளைப் பிரிந்து செல்லின் இறந்து படுவாள்.

இப்பாட்டில் 'வான்கடல்..........புலம்ப' என்பது நெய்தல் நிலத்தியல்பையும், 'நெய்தல்..........பெரும' என்பது தலைவன் பிரிவெண்ணலையும், 'உரிதினில்..........வேண்டும்' என்பது தோழி தன் விருப்பத்தையும், 'கொண்டலொடு..........எக்கர்' என்பதுமணல் மேட்டின் அழிவையும், பழந்திமில்..........பகுக் கும், என்பது பரதவர் செயலையும், 'வளம்..........நலன்' என்பது தலைவியின் நலத்தையும் பற்றியனவாகும்.

மெல்லம் புலம்ப, பெரும, கலுழப் பிரித லெண்ணினை யாயின் நன்றும் அரிதுற்றனை. இவள் நலன் உரிதினிற் கொண்டு ஆங்குப் பெயர்தல் வேண்டும். 'தூவற்கெதிரிய' உருபுமயக்கம். எதிரிய புன்னை. எதிரிய சினையெனலுமாம். மீன்கண்டன்ன அரும்பு. மணலிற் கண்ட அரும்புகட்கு வானிற் கண்ட மீன்கள் உவமை.

அரும்பு ஊழ்த்தசினை. சினையிற்புள் இறை கூரும்புலம்பு. உடைவது அலைநீர் உடைதருவது எக்கர் உடைதரல்=உடை தலைச்செய்தல். 'பொங்குபிசிர் முழவிசைப் புணரியெழு தரும் உடைகடல்' (நற். 67 அகம். 310) 'உறுகால் எடுத்த ஓங்குவரற் புணரி நுண்மணலடை கரையுடை தருந், தண்கடல்' (பதிற்.88) எனப் பிறண்டும் வருதல் காண்க. கொண்டலும் புணரியும் எக்கரை உடைப்பனவாகவும் பொருள் கோடற் கிடனுண்டு. பழந்திமிலை எக்கரிற் கொன்ற பரதவர். புன்சினையில் இறை கூரும்புலம்பு. பரதவர் பாக்கத்துப் பகுக்குந் தொண்டி. தொண்டியன்ன இவள் நலன். இவள் நலன் உரிதினிற்கொண்டு பெயர்தல்வேண்டும்.

1. வான்கடல்:— 'வான்முந்நீர்' = 'அழகையுடைய கடலிடம்' (கலி. 103)

2. கடற்பரப்பு:— 'பெருங்கடற்பரப்பிற் சேயிறாநடுங்க' (அகம். 60, நற். 155. 159. 215, 231.)

3. தூவல்:— 'தூவலின் நனைந்த தொடலை' (ஐங். 206). 'தூவற்கலித்த தேம்பாய் புன்னை' (புறம். 24). 'குளிர்ப் பொதும் பர்நளித் தூவல்' (மதுரைக். 115). இது துவலை எனவும் படும். 'வடந்தைதுவலை தூவ' (நற். 152, 181). துவலைத் தண்டுளி'(ஐங். 141.) 'இருங்கழித் துவலை யொலியிற் றுஞ்சும்' (ஐங். 163.) துவலை என்பது திவலை (குறுந். 5, 334, 344, நற். 127)யென மரீஇயிற்று என்பர். (அகம்: (143, 166, 236, 252 262, 274, 359)பிள்ளை, பிட்டு, பிண்டு, தின்று, பிரை, பிடுங்கு, திட்டுஎன்னும்சொற்களை மக்கள் வழங்கும் முறையை நோக்கின் இகரம் உகரமாதலன்றி உகரம் இகரமாதலில்லை யென்பது தெளிவாம்.

4. எதிரிய:— 'எதிரியஇலவம்' 'எதிரிய வேனிலான் 'எதிரிய அங்கை' (கலி. 26, 30, 83). 'பெயற் கெதிரியசிதர் கொடண்மலர்' (ஐங்.458). 'வருமழைக் கெதிரிய மணிநிற விரும்புதல்' 'வேனிலெதிரிய அதிரல்' 'தலைநாட்கெதிரிய தண்பெயலெழிலி' (நற். 302, 337, 362). அகம். 27:—13.

5. மீன் கண்டன்ன :— 'மீன் கண்டன்ன வெண்மணல்' (பெருங். 2. 9:—5) 'மீன் பூத்தன்ன' (முருகு. 169: பெரும்பாண். 477). (புறம். 109.) (சிலப். கானல். 29) (சிந். 74).

6. ஊழ்த்தல் :— 'வயா மரங்கள் இலை ஊழ்த்து' (சிந். 2690). மலர்தல் என்ற பொருளுமுண்டு. ஆசிரியர் நச்சினார்க்கினியர் செவ்வி யழிதல் என்றுங் கூறுவர். (கலி. 26, 32, 33, 44, 67. கார். 8. குறள். 650. மலைபடு. 180. புறம். 381) வேறு பொருளுமுண்டு.

7. முடவுமுதிர் புன்னை :— 'முடத்தாட் புன்னை' (அகம். 180, 344) முடமுதிர் புன்னைப் படுகோட்டிருந்த மடமுடைநாரை' (ஐங். எழு. 69.) 'முடக்காற் புன்னை' (மணிமே. 8:—9)

'கொடுங்காற் புன்னை' (பெரும்: 266). 'முடமுதிர் மருதத்துப் பெருந்துறை' (ஐங். 31) 'முடமுதிர் பலவின் (அகம். 91, 352) குடமருள் பெரும்பழம்' (நற். 353). முடமுதிர்நரை (நற். 263) 'முடமுதிர் பார்ப்பான்' கலி. 65.

8. தடவுநிலை மாச்சினை :— (அகம். 320, 165) 'தடவு நிலைப் பலவின்' (பெரும்பாண். 77) 'தடவு நிலைக் கொன்றை' குறுந். 66, 219. பெருங். க. 49:—116). 'தடவினோங்கு சினை' (குறுந். 160) 'தடவுநிலைத் தாழை' குறுந். 219) தடவுச்சினை பெருங்: க. 41, 27) 'தடவு நிலை நிழற்றிய' (பெருங். க. 38:—126). 'தடவுமுதல்' (நற். 19. 235). மாச்சினை. (நற் 49, குறுந். 175). (தொல். உரி. 24—5) அகம். 23.

9. (புள்) இறை கூர்தல்:— 'புள்ளிறைகூரும்' (மணிமே. 6:—85) 'புள்ளிறை கூருந்துறைவன்' (ஐங். 142) 'வண்டிறை கொண்ட எரிமருள் தோன்றி' (அகம். 218). 'ஈர்க் குழாத் தோடிறை கூர்ந்தபே எற்பகை' (புறம். 136). 'தேனிறை கொள்ளும் இரும்பல் யானை' (புறம். 17) 'தெறன்மற வரிறை கூர்தல்' (புறம். 345) 'அரசிறை கொண்ட ஆவணம்' (பெருங். 2, 15:—34)

10. மெல்லம் புலம்பன்:—(தொ. பொ. 20, உரை) (குறுந் 5, 245, ஐங், 120, 133, 166, 189, 190, 302, நற், 38, 127, 195, 223, 263, அகம். 330, 400)

11. நெய்தலுண்கண்:— 'இருங்கழிமலர்ந்த கண்போல் நெய்தல்' 'உறுகழிமருங்கிேதை மொடுமலர்ந்த, சிறுகருநெய்தற் கண்போல் மாமலர்; 'சுரும்புண மலர்ந்த பெருந்தண் நெய்தல், மணியேர்மாண் நலம் ஒரீஇப், பொன்னேர் வண்ணங் கொண்ட என்கண்ணே', (அகம். 83, 170, 230, 290.)'நெய்தல்.......... மகளிர் கண்ணின்மானும்' (குறுந். 9). வைகறைமலரு நெய்தல் போலத், தகைபெரிதுடைய காதலிகண்ணே',(ஐங். 151, 188). 'கயவாயநெய்தல்........மதருண்கண்' (பரிபா. 8:—74-5) கட் கமழ்நெய்தல்........கண்போல்மலர்ந்த காமருசுனைமலர்' (முருகு.

74-5) 'கண்ணவிழ் நெய்தலும்' (சிலப். 14:—77) 'கண்போல் நெய்தல்' 'கழிசேர் மருங்கிற் கணைக் கானீடிக், கண்போற் பூத்தமை கண்டு நுண்பல, சிறு பாசடைய நெய்தல் குறுமோ சென்றெனக் கூறுதோளே' (நற். 8, 27, 283) 'நெய்தலி தழுண்கண்' 'நெய்தல் மலரன்னகண்' (கலி, 15, 34, 39, 121; அகம். 129, 179, 183, 230, 234, 237, 276, 285, 320, 363,) உண்கண் என்பதன் பொருளறிக. (கலி. 39, 121, 131.) கண்ணறு நெய்தல் கமழும் கொடுங்கழி' (ஐங்-எழு. 63) 'மணி நிற நெய்தல் மலர் புரையுங் கண்ணுய்' (கைந். 51). குறள் 1172.

12. பைதல்:—குறுங். 13. 125. 139. 298. ஐங். 135. (குளிர். பரிபா. 11:—75) வருத்தம். கலி. 5. 16. 32. 46. 101. (நோய். 126) 129, 130, 138, 142. குறள். 1172, 1175. (துன்பம் பெருங். க. 33:—108. 157. 36:—159.) (பசலை. 40:—49) (துன்பம். ந. 6:—155.) (பசலை. கைந். 25.) துன்பம். புறம். 41, 221.

13. உரிதினின்:—உரிது=உரித்து. அகம். 69, 256, 392. கலி.76, 92. குறிஞ்சிப். 65. பரிபா 13:-13 உரிதினின். பரிபா. 18:—55. சிலப். 2:—40. இருவருரையும் பார்க்க. உரித்தாக =சேமமாகவேண்டி. புறப். வெண். 306. உரியது. பெருங். ந. 15:—24. உரிதினின். சூளா. மந்திர. 36. அரசியல். 357.

14. கொண்டல்:-'கொண்டலிடுமணல்' அகம்.20, 40, 100, 178 முன்பனிக் காலத்துக் காற்று. கொண்டல் குணக்கிலிருந்து வருவது. கோடை குடக்கிலிருந்து வருவது. தென்றல் தெற்கி லிருந்து வருவது. வாடை வடக்கிலிருந்து வருவது. ஐங். 209. [மேகம், கொள்ளுதல் என்ற பொருளிலும் வரும். கொள் + தல் =கொண்டல் விண்டல் என்பதுபோல கொண்டல் கட்டி, கார் காத்தார் என்பன ஈண்டுக் கருதற்குரியன.] நற். 74. 89. குறுங் 185. சிலப். 14:—110. கலி. 106. பெருங். ச. 7:—132. பு. வெ. 179. மதுரைக். 530. 568. புறம். 34. முத்தொள். 47. 'கோடை மேல்காற்றின் நாமம். கொண்டல் கீழ்காற்றிற்கேற்கும். வாடை யின் நாமம் வீசும் வடகாற்று வடந்தை என்ப'. 'வருதென்கால் சிறுகால் தென்றி |மலயக்கால் வசந்தன் தென்றல்' (நிகண்டு).

15. குரூஉ:—'குருவும் கெழுவும் நிறனாகும்மே' (தொல். சொல். உரி. 5.) சிந். 2748.

16. புணரி:—இது காரணக் குறி. குறுந். 109. 144. 299. 351. ஐங். 150. புறம். 2. 31. பதிற். 11. 30. அகம். 20. 65. 190. அலை, நீர், கடல், நற். 11. கடனீர். 63. 315, 74. 335. 395. பட்டினப். 97.

17. உடைதரல்:—உடைதலைச் செய்தல். குறுந். 351-ல் 'புணரிஉடைதருந்துறை' கலி. 33, 66, 97, 138, 144ல் துனைதந் தார்= விரைதலைத் தந்தார். சூழ்தந்து= சூழ்தலைச் செய்து. திரிதர =திரிதலைச்செய்ய. இதுதருகடாத்தால்=சொரிதலைச் செய்யும் மதத்தாலே. நகுதரும்= நகுதலைச்செய்யும் என்றிருத் தல் அறியத்தக்கது.

18. எக்கர். 'ஊர்திரைதொகுத்தவுயர்மணல்' மணி. 25:-168. 'உரவு நீர்த்திரை பொர வோங்கியஎக்கர்' கலி. 132:—1. 'முழங்குதிரை கொழீஇப மூரிமெக்கர்' நற்.15. 203. 'படுதிரை கொழீஇய பானிறவெக்கர்' நற். 49. 'பெருங்கடல் எறிதிரை கொழீஇய எக்கர்' நற்.106. 'எறிதிரை தொகுத்தஎக்கர் நெடுங் கோட்டுத்துறுகடல்' நற். 211. இது 'குன்றிற்றோன்றுங்குவவு மணல் (அகம். 310, 341, 350, 360; நற். 207, 235, 254) எனவும்படும். கொடுங்கழிவளைஇய குன்றுபோல் வாலெக்கர். (கலி. 127.) எக்கர்=மணற்குன்று. (புறம். 177). கடுவரலருவிக் கடும்புனல் கொழித்த இடுமணல். மணி. 17:—25-6. 'இடுமண லெக்கர்' (ஐங்-எழு. 59. சிலப். காட்சி. 23.) 'எக்கரிடுமணல்'(ஐங். ஐம்.48.) 'அணிமணலெக்கர்' (ஐங். எழு. 60.) 'அடும்பிவரெக் கர்' (அகம். 320. ஐங். எழு.62.) 'அடும்பிமிரெக்கர்' (கைந். 53). எக்கரழகு. (குறுந். 53. 299.) எக்கர்=இடுமணல். (கலி. நச். உரை) இடுமணல் நெடுங்கோடு. (கலி.135. ஐங். 177.) மணங்கம ழிள மணலெக்கர் (அகம். 250, 360:—14ன் பொருளேஉணர்ந்து மகிழ்க.

19. திமில்:— மரக்கல வகையுளொன்று. களவழி. 18. மீன்படகு மதுரைக். 116. கலி. 136 குறுந். 123, 304 அகம்.

340. நற். 111, 175, 199. அகம் 260. திமில் களிறுபோறல். கலி 135. 149. நற். 74. பதிற். 52. புறம். 13, 26. மணி. 4:—29—44. சிந். 493—501. 2223. 2231. 2793. மதுரைக். 376—83. திணை. நூற். 50, 52, 53. திமில் விளக்கம். (சிலப். கடலாடு.142. புறம். 60. நற் 372. 388. அகம். 65. 100. 240. திமில்விசை. அகம் 330. 340 நற். 388. குறுந். 304. திமிலின்பெருக்கம். அகம். 190. 210. நற். 331, விளக்குஎண்ணல். நற், 372, பட்டினப்.112 திமில் மலை போறல். அகம். 187.

20. கொல்லல்:— கெடுத்தல். குணங்கொல்லாது= நற் குணங்களைக் கெடாது. புறம். 55:—12.

21. பரதவர், நுளையர், பதிற் 48, உரை, புறம், 24 பட்டினப்- 112. நற்45, 87, 101, 175, 199, 239, 372,388, அகம், 140, 250, 300 மீன்விலைப் பரதவர், சிலப் இந்திர, 25, வலைப் பரதவர். குறுந் 184, சிலப், 6:—142. ஐங், எழு. 66, பரதர் திணை. ஐம், 45. நற், 4, 38, 63, 111, 207. அகம், 30, 70.

22. மோட்டு மணலடைகரை:—அகம், 130. நற், 124, 159, 11, 27, 35, 243. மதுரைக், 386—7, குறுந், 175, 236, 316. அகம், 60, 280 பதிற், 30, 80. பெருங், க 41:—120. அகம், 34, 80, 97, 177, 355. குறுந், 171, 303. புறம், 342. பெருங், க, 40: 258, ந, 1:- 184. நற், 118.

23. கோட்டுமீன். அகம். 80, 170, 210. புறம். 399. சிந். 2325. நற். 49. குறுந். 304.

24. கொண்டி:—பரிபா. 10:—120. புறம். 78, 198. பதிற். 43, 63. பெரும்பாண்:—454. மதுரைக். 137. உரை. பட்டினப்:—212.

25. மணங்கமழ் பாக்கம்:— தெண்கழிக்கானல் விரை மேவும் பாக்கம். (திணை. நூற். 48). அகம். 196, 245, 270, 338. பொருந: 210. பட்டினப்:—27. நற். 111, 127, 167, 203:—2, 7, 207, 323. பாக்கம் என்பது குறிஞ்சி முதலிய நிலங்களிலுள்ள சிற்றூர்க்கும், அரசனிருப்புக்கும் பெயராத

லுண்டு. ‘குறவர் பாக்கத்திழி தருநாடன்’. குறுங். 339. ‘நறவுமலி பாக்கத்துக் குறமகள்.’ குறுங். 394. ‘நன்றே காதலர் சென்றவாறே, குருந்தங் கண்ணிக் கோவலர் பெருந் தண்ணிலைய பாக்கமு முடைத்தே.’ ஐங். 115, 173, 439. ‘பாடுவார் பாக்கம்’ பரிபா. எ:—31. பதிற். 13:—12. உரை. ‘தூவருவி பூக்கண் கழூஉம் புறவிற்றாய்ப் பொன்விளையும் பாக்கம்’. ஐங். ஐம். 12. பெரும்பாண் :—367. முல்லைப் :—7. உரை. மதுரைக். 137. ‘சிலம்படைந் திருந்தபாக்கம்’ மலைபடு. 162.

26. தொண்டி:—கடற்கரைப்பட்டினம். சேரநாட்டிலும், சோழநாட்டிலும், இப்பெயர்கொண்ட நகருண்டு. இப்பத்தாம் அகப்பாட்டிற் சேர நாட்டுத் தொண்டியே கூறப்பட்டது. அகம். 60, 290. ஐங். 171—180. பதிற். 60. பதிகம். 88. குறுங் 128, 210, 238. புறம் 17, 48. தொண்டியோர்=சோழ குலத்தோர். சிலப். ஊர்காண் 107 உரை. அகம். 169-ம் பாட்டினைப் பாடிய சாத்தனார் ஊர். சேரநாட்டுத் தொண்டியைச் சார்ந்ததே. நற் 195.

27. மீன் பகுத்தல்:—அகம் 70. (முத்தம் பகுத்தலுங் கூறப்படும். அகம் 28).

புன்னைச் சினையிற் புள்ளிறை கூருமென்றது. புள்ளுக்குப் புன்னையிருப்பிடமாயினாற்போல எமக்கு நீ யிடனாகின்றிலை என்றவாறு.

இறைச்சிப்பொருள்:—‘பழந்திமில்........தொண்டி’பரதவர் பழமையானவை எனத் திமிலைக் கெடுத்தமையானும் புதிதாக வலை செய்தமையானும் தமது தொழிலாகிய வேட்டைமேற் செல்லாது, தேடாமல் வந்த இழிந்த சுறுமீனை யகப்படுத்து (கலி. 121:—20-1) அதனையழித்துக் கூறுவைத்துப் பலரையும் அழைத்தாற் போல் நீயிரும் நமக்குரிய ஒழுக்கமாகிய நல்லாற்றிற்செல்லாது, கண்டோரிகழ்ந்த களவொழுக்கத்திலே ஒழுகி, இக்களவினைப் பரப்பிப் பலரும் அலர் கூறும்படி செய்யா நின்றீர்.

(குறிப்புரை)

இங்கு அகம். 70 ம் பாட்டின் குறிப்புரையை நோக்குக. இதனைப் பாடிய நல்லிசைப் புலவர் அம்மூவனார் வரலாற்றுக் குறிப்பை ஐங்குறு நூற்றுட் பாடினர் வரலாற்றிற் காண்க.

எண்ணெயும் தண்ணீரும்

திரு. அ. சிதம்பரநாதஞ் செட்டியார் பி. ஏ., ஆனர்ஸ்
தமிழ்ப்பேராசிரியர், அண்ணமலைநகர்

"எள்ளும் நீரும் இரைக்க ஒரு பிள்ளை வேண்டாவோ", என்பது பழமொழி. இம்மொழி எள்ளுக்கும் நீரிற்கும் ஒரு தொடர்பு காட்டுமேல், எண்ணெய்க்கும் தண்ணீர்க்கும் ஓர் இயைபு உண்டு என்றுங் கூறலாம். என்னை? எள்ளினின்று எடுபடும் நெய் அன்றோ எண்ணெய் ஆவது? தண்மை தங்கிய நீரன்றோ தண்ணீர் ஆவது? ஆனால், நாமெல்லாம் இப்பொருளிலேயே இச்சொற்களை வழங்கி வருகிறோமா? இல்லையே. ஆகவிற்றான், இவை தம்முள் ஓர் ஒற்றுமையுண்டு என்று முன்னர் உரைத்தது.

நெய் என்பது பளபளப்பும் ஈர்மையும் உள்ள எந்தப் பொருளையும் ஒரு காலத்துக் குறித்திருக்க வேண்டும். அன்றேல், அதற்குத் தேன் புழுகு, குருதி, நிணம் முதலாய பொருள்கள் வழங்கி யிருக்கமாட்டா. நெய்ப்பு என்னும் சொல்லைப் பளபளப்பு என்னும் பொருளிலும் குளிர்ச்சி என்னும் பொருளிலும் நச்சினார்க்கினியர் ஆளக் காண்கின்றோம். சிந்தாமணி 170-வது செய்யுளுரையில் "அமை திரட்சிக்கும் நெய்ப்பிற்கும் உவமை" என்னுமிடத்திற் பளபளப்பையும், திருமுருகாற்றுப்படை 20-ஆம் அடியின் உரையில் "நெய்ப்பினை யுடைய மயிரிலே" என்னுமிடத்திற் குளிர்ச்சியையும் அவர் குறித்தமை கண்டு கொள்க. சிந்தாமணியுரைப் பகுதியில்வரும் நெய்ப்பு என்னும் சொல்லுக்குப் பளபளப்பு என்பதே பொருளென்று மகாமகோபாத்தியாய ஐயரவர்களும் குறிப்புரையிற் குறித்துள்ளார்கள். திருமுருகாற்றுப்படை யுரைப் பகுதியில் வரும் நெய்ப்பு என்பது குளிர்ச்சியையே குறித்ததாதல் வேண்டும் என்பது "துணையோர் ஆய்ந்த இணை ஈர் ஓதி" என்னும்பாட்டின் அடிக்கண் உள்ள 'ஈர்' என்னும் சொல்லாற்பெறப் படும். குளிர்ச்சியே யன்றோ? நீர் வாழ் மீனின் ஈரலிலிருந்து

எடுபடும் நெய்க்கு (Cod-liver oil) நேய் எனப் பெயர் வந்ததும் பளபளப்புக் காரணமாக இருத்தல் வேண்டும் எனத் தோன்று கிறது. மீன் நெய் என ஒன்று கடைச்சங்க காலத்தே அறி யப்பட்டிருந்தது என்பதற்குச் சான்று கரிகாலனைப் பற்றிய பொருநராற்றுப் படை என்னும் "பாட்டில் மீனெய்யொடு நறவு மறுகவும்" என வரும் அடியாற் பெறுகின்றோம்.

இனி, நெய் என்னுஞ் சொல் தேனைக் குறித்தது என்ப தற்குச் சான்று சிந்தாமணி 1198-ஆம் செய்யுளில் வரும் "நெய்ம்முதிர் தொடையல் கீறி" என்னும் பகுதியாகும். பொருநராற்றுப்படையில் "தேன் நெய்யொடு கிழங்கு மாறி யோர்" என்னும் அடிக்கு "தேனாகிய நெய்யோடே கிழங்கையும் விற்றவர்கள்" என்று வரையப்பட்டிருக்கும் உரையுங் காணத் தக்கது. தேனை வடிகட்டுதற்கு உதவியாயிருத்தலின் அன்றோ பன்னாடை நேய்யரி எனப் பெயர் பெற்றது என்பர் ஐயரவர் களும், "தேன், நெய்யென்றும் வழங்கும்" என்பது அவர் வாக்கு. புழுகு என்னும் பொருளிலும் இச்சொல் வழங்கப்பெற் றுளது என்பதற்குக் கீழ்வருவன ஆதாரம்:—

i. "நேய்ம் மாண் சிவிறியர்" (பரிபாடல் 6. வரி 34.)

ii. "மையிருங் கூந்தல் நேய்பணி மறப்ப" (சிலப்பு IV. 56)

iii. "நெய்த் தலைக் கருங்குழல்" (சிந்தாமணி IV. 251)

தேனும் புழுகும் நெய்ப் புடைமையால் நெய் என வழங்கப் பட்டன. இவற்றினின்று வேறு பிரித்துக் காட்டும் பொருட்டுச் சிற்சில சமயங்களில் மாட்டின் பாலிற் படும் நேய் ஆனெய் என்றும் வெண்ணெய் என்றும் வழங்கப் பட்டிருத்தலைக் காண்கின்றோம். சிந்தாமணியில் (II. 72) "உண்ணா உருக்கிய ஆனெய் போல் மேனியள்—வெண்ணெய் போன்று ஊறு இனியள்" என வருதல் காண்க. கலித்தொகையிலும் (108) "வேண்ணெய்த் தெழி கேட்கும் அண்மையாற் சேய்த்தன்றி" என வருதல் காண்க.* அன்றியும் இப்பொருளில் வாளா 'நெய்' எனவும் வழங்கக் காண்கிறோம். பரிபாடலின் (16) "நேய் குடை

* பெரும் பாணாற்றுப் படை 306-ஆம் அடியிலும் வருதல் காண்க.

தயிரின் நுரையொடும் பிறவொடும்'' என வருமிடத்து உருக்கப் படாத நெய்யும் 'நெய்' என்ற சொல்லாற் குறிக்கப் படுதலைக் காண்க. ''பாலிற்படு நெய்போல் மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்'' என்று அப்பர் சுவாமிகள் கூறியவிடத்தும் நெய் யென்பது உருக்கப் படாததையே குறித்தலைக் காண்க. இது இன்னதுதான் என்பது அவர் ஆளும் ''கோல் நட்டு—கயிற்றி னால்—வாங்கிக் கடைய'' என்னுஞ்சொற்களாற் பெறப்படுவது ஒரு தலை. அச்சொல் ஆனுருக்கையுங் (உருக்கிய நெய்யையும்) குறித்தது என்பதற்குப் பல சான்றுகள் உள:—

i. ''நெல்லுடைக் கவளமொடு நெய்ம் மிதிபெறூஅ'' (புறம். 44)

ii. ''நெய்ம் மிதி கவளம்'' (பெரும்பாண். 394)

iii. ''நெய்யால் எரி நுதுப்பேம் என்றற்றால்'' (குறள். 1148)

iv. ''கரும்பெறி கடிகையொடு நெய்ம்மலி கவளங் கொள்ளாது'' (சிந்தா. IV. 226)

அச்சொல்லே எள்ளினின்று எடுபடும் நெய்யையும் உணர்த் திற்று என்பதற்கு முல்லைப்பாட்டு 48-ஆம் அடியில்வரும் ''நெய் யுமிழ் சுரையர்'' என்பதும், அகநானூற்றுப் பதினேழாம் பாட வில் வரும் ''நெய்யுமிழ் சுடரிற் கால்பொரச் சில்கி'' என்பதும் ஏற்ற ஆதாரங்கள். இவற்றினுஞ் சிறந்ததோர் ஆதாரத்தையும் தொல்காப்பியக் கற்பியலிற் (5) காண்கின்றோம்.

''புதல்வற் பயந்த புனிறுசேர் பொழுதின்
நெய்பணி மயக்கம் புரிந்தோள்''

என ஆண்டு வருதலைப் பார்க்க. ஆண்டுச் சுட்டப் படுவது ஈன்ற தாய் சின்னாள் கழித்து எண்ணெயாடுவது என்பதை ''எண்ணெ யாடும் மயக்கத்தை விரும்பிய தலைவியை'' என்று நச்சினார்க்கினி யர் உரைதருமாற்றால் உணரல் கூடும். ''புதல்வனை யீன்றிவள் நெய்யாடினளே'' என வரும் பண்டை யிலக்கியமும் உண்டு.

மகளிர் கூந்தலுக்குப் புழுகையேயன்றி, எள்ளான் ஆய நெய்யையும் ஊட்டி வந்தனர் என்று பழந்தமிழ்ப் பனுவல்கள்

பகரக் காண்கிறோம். மகளிர் கூந்தலில் அணிந்த புழுகு 'நெய்' என்ற சொல்லால் சிலப்பதிகாரத்தும் சிந்தாமணியிலும் குறிக்கப்பட்டுளது என்பதை முன்னரே கண்டோம். இனி, அவர்கள் எண்ணெயிட்டுக் கூந்தலை நீவிய செய்திக்குரிய ஆதாரத்தையும் காண்போமாக. "எண்ணெய் நீவிய நலம்பெறு சென்னி" எனக் குறிஞ்சிப் பாட்டின்கண் வருகின்றது. பரிபாடலிலும் மகளிர் எண்ணெயிட்டு நீராடும் செய்தி உரைக்கப் படுகிறது. "எண்ணெய் கழல இழைதுகள் பிசைவார்" என வருதல்காண்க. (பரி. 10.) எண்ணெய் என்னும் சொல்லின் ஆட்சியைப் புறநானூற்றிலும் காண்கின்றோம். ஓர் அரசனது முரசுகட்டிலுக்குச் சார்த்திய பூக்கள் எண்ணெயினது நுரையை முகந்தாலொத்து இருந்தன என மோசிகீரனார் என்னும் புலவர் கூறுகிறார். அப்பகுதி "எண்ணெய் நுரைமுகந்தன்ன மென்பூஞ் சேக்கை" என்பது (புறம். 50). இவற்றால், எள்ளினின்று எடுபட்டதே எண்ணெய் என வழங்கப்பட்டது முற்காலத்தில் என்பது போதரும்.

ஆனால், இக்காலத்திலோ அப்பொருளில் மாத்திரம் அதனை வழங்குகின்றோமில்லை. வேப்பெண்ணெய், ஆமணக்கெண்ணய் தேங்காயெண்ணெய், இலுப்பையெண்ணெய், கடலைக்கொட்டை யெண்ணய் என்றெல்லாம் சொல்லுகிறோம்.* மண் எண்ணெய் என்றும் ஒரு நெய்யைக் குறிக்கிறோம். இந்நெய்களில் எள் என்பது எள்ளளவும்இல்லையே! இல்லையாயினும், நாம் ஏன் இவற்றை எண்ணெய் என்று கூறுகிறோம்? கவிச்சக்கரவர்த்தியாகிய சயங்கொண்டார் எள்ளினின்று எடுபடாததையும் எண்ணெயென்று வழங்கினமையாலா? அவர் யானையின் மதத்தையும் தயிலம் எனப் பேய்கள் கருதின என்றும், அவ் எண்ணெய் போக்க வெண் மூளைகளால் தேய்க்குமாறு பணித்துக் கொண்டன என்றுங் கூறியிருப்பது உண்மையே. (கலிங்கத்துப் பரணி 493-494). ஈண்டு, அவர் எண்ணெய் என்னுஞ் சொல்லை நெய்ப்புடைய

* வி. கோ. சூரியநாரயண சாஸ்திரியார்: தமிழ்மொழிவரலாறு. [பக். 88.

பொருள் அல்லது நெய் என்னுங் கருத்துப்பட வழங்கி யுள்ளா ராயினும், அதுபற்றி நாம் வழங்குகின்றோமென்பது முறை யாகாது. ஏனெனின், அவ்வழக்கு நம்முட் பலர்க்குத் தெரியாது ஆதலின். பின் என்னையோ காரணம்?

மொழியிலக்கண வல்லுநர் மேனாட்டில் சென்ற நூற்றாண் டின் பிற்பகுதியில் அர்த்த சாஸ்திரப் பயிற்சி கொள்வாராயி னர். அவரது அர்த்த சாஸ்திரம் கௌடில்யரது அர்த்த சாஸ் திரத்தின் வேறுபட்டது. அவர் புதுவதாகப் பயின்ற சாஸ் திரம் **சொற்பொருள்** பற்றியதாகலின், அப்பயிற்சியின் பயனாய், சில நியதிகள் பேச்சுவழக்குள்ள மொழிகளின் கண்ணே நிகழ் வதைக் கண்டனர். அவை தம்முள் ஒரு நியதிப்படி சில சொற்கள் குறிக்கும் பொருள் நாளடைவில் விரிதலுண்டு என்று கூறியுள் ளார்கள். அங்ஙனம் நோக்கின், எண்ணெய் என்ற சொல் தனித்த ஒரு நெய்யை முற்காலத்தே குறித்துவந்தது நாளடை வில் நெய் வருக்கத்தையே பொதுவாகக் குறிக்கும் விரிந்த பொருட்பேறு பெறலாயிற்று என்பது புலப்படும். அதனால், வேப்பெண்ணெய் முதல் மண்ணெய் இறுதியாக நாம் வழங்கும் சொற்கள் குற்றமுடையன ஆகா. என்? அவையெல்லாம் மொழியிலக்கண நியதி ஒன்றின் காரணமாக வந்து சேர்ந்தன ஆகலின் என்க.

இந்நியதியே காரணமாகத் **தண்ணீரும்** நடத்தலின் அன்றே இதற்கும் எண்ணெய்க்கும் ஓர் இயைபு தொடக்கத்திற் சுட்டி யது! எண்ணெய் இருசொற்களான் ஆயவாறே தண்ணீரும் இரு சொற்களான் ஆயது. தண்மை நீர் தண்ணீர் அன்றோ! கால்டு வேலைக் கேட்டால் தண் நீர் அல்லது தன் நீரே தண்ணீரா யிற்று என்பர். தண்டலை (=சோலை), தண்ணம் (=குளிர்ச்சி), தண்ணவன் (சந்திரன்), தளம் (இலை), தளவம் (=முல்லைக் கொடி), தளி (=மழைத்துளி) தளிர் (தழை), தட்பம் (குளிர்ச்சி) ஆகிய சொற்களை நோக்கி யறியுமாறு பணிப்பர். நல் என்பதி லிருந்து நன்மை வந்ததென்றும் இர் என்பதிலிருந்து இரண்டு வந்ததென்றும், திராவிடக் குழுமொழிகளெல்லாவற்றையும்

ஒத்து நோக்கிய காரணத்தால் கூறும் அவர் இங்ஙனம் என் கூறுர்? எங்ஙனமாயினும், குளிர்ச்சி பொருந்திய நீரே தண்ணீர் எனப் பட்டதாதல் வேண்டும். நீர் என்னுஞ் சொல்லாலேயே ஜலமென்பது பொதுவாக முன்னரெல்லாம் உணர்த்தப்பட்டு வந்தது. இதற்குச் சான்றுகள் பல வேண்டா ஆயினும் சில காண்போம்:—

i. "நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே" (புறம். 186)

ii. "நீரின் றமையாது உலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையாது ஒழுக்கு" (குறள். 20)

அச்சொல்லே பிறசில சொற்களோடு சேர்ந்து தெங்கின்நீரை யும் எச்சிலையும் உணர்த்தக் காண்கின்றோம். "இளநீர் விழுக் குலை யுதிர" என்னும் திருமுருகாற்றுப்படைப் பகுதியில் தெங்கினது நீரும், "பணிமொழி வாலெயிறு ஊறிய நீர் என்னும் குறட்பகுதில் (1121) எச்சிலும் குறிக்கப்படுகின்றன. ஆற்று நீரென்றும், ஊற்றுநீரென்றும், மழைநீரென்றும், தீநீரென்றும், வெந்நீரென்றும் உள்ள வழக்குகள் நீர் என்னுஞ் சொல்லின் பொதுத் தன்மையைச் சுட்டுகின்றன. கண்ணில் உண்டாம் நீர் கண்ணீராதலும், புண்ணில் தோன்றுவது புண்ணீர் ஆத லும், உண்ணப்படும் நீர் உண்ணு நீராதலும் உண்டு அன்றே? இவையும் அச்சொல்லின் பொதுத் தன்மையைச் சுட்டல் வெளிப்படை. குளிர்ந்த நீரே தண்ணீராதலும் தேற்றம். பண்டையோரெல்லாம் தண்ணீர் என்னுஞ் சொல்லை இப் பொருளிலேயே ஆளக் காண்கிறோம்.

1. "அந்நீர்த் **தண்ணீர்** அமுதொடு கொணர்கேம்"
(மணிமேகலை x. 37)

2. "த(ண்)ணீர் மலரணிந்து சந்தனஞ்செய் பந்தரும்"
(சிந்தா. i. 75)

3. "எந்தைக்கு ஒருநீ **தண்ணீர்** கொடுபோய்அளித்து"
(கம்பரா—நகர்நீங்க. 81)

இதனையே "தண்ணம் புனல்" என்றார் ஒரு பழம் புலவர் பரிபாடலின் கண்ணே. "தண்ணம் புனல் தாயிற்று" என்றார் அப்பாடலில் (6).

நாமோ குளிர்ந்த நீரை மாத்திரம் குறிக்குமாறு "தண்ணீர்" என்னுஞ் சொல்லை ஆள்கின்றோமில்லை. சுடு தண்ணீர், காபித்தண்ணீர், தேத் தண்ணீர், கஞ்சித் தண்ணீர் என்றெல்லாம் சொல்லுகிறோம். கண்ணிலே தண்ணீர் வருகிறது என்றுஞ்சொல்லுகிறோம். "சூடான தேத்தண்ணீர் குடியுங்கள்" என்னும் விளம்பரங்களையுங் காண்கின்றோம். வெப்பமும் தட்பமும் ஒருங்கே தரவல்ல இயந்திரத்தால் அமைக்கப் படாது இருந்தும், தேநீரைச் சூடான தேத் தண்ணீர் என்று கூறுவது முறையாமா? மீண்டும், சயங்கொண்டாரைத் துணைக்கு இழுக்க முயன்றால், அவர் துணைபுரிய மாட்டேன் என்று சொல்லுகின்றாரில்லை.

"வெம்புங் குருதிப் பேராற்றில் வேண்டுந் தண்ணீர் வேழத்தின்
கும்பங் களிலே முகந்தெடுத்துக் குளிர வைத்துக் கொள்ளீரே"
(பரணி. 543)

என்று அவர் சொல்லிய இடத்து, தண்ணீர் வெந்நீராயிருத்தலினன்றோ "குளிரவைத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லியிருக்கிறார்! அந்நீர் வெப்பமுள்ள குருதிநீர் எனத் தெரிகிறது. அந்நீரைக் குறிக்கத் தண்ணீர் என்னுஞ் சொல்லை அவர் ஆள்வாரேயாயின், நாமேன் சூடான தேத்தண்ணீர் என்னலாகாது?

மேலும், பச்சைத் தண்ணீர் என்றும் குளிர்ந்த தண்ணீர் என்றும் காயவைக்கப்படாத நீரைக் குறிக்கிறோம். தண்ணீர் என்றாலே அமையுமே! என் பின்னர் நாம் இங்ஙனமெல்லாம் கூறுவது? எண்ணெய்க்குக் கண்ட நியதி காரணமாகவே என்பது பெறப்படும். என்னை? ஒரு காலத்தில் ஒருவகை நீரைக் குறித்து வந்த இச்சொல் நாளடைவிற் பொருளில் விரிந்து பொதுவாக நீர் என்னும் பொருட்டாயிற்று என்பதே கருத்து. இவ் விரியும் நியதி காரணமாகவே கவியரசர் சயங்கொண்டாரும் "குளிர்ந்த தண்ணீர் தனைமொண்டு—புகைத்த வாயைப் பூசீரே" என்று அமைத்தாராகவேண்டும். (பரணி. 569).

எனவே, மொழியிலக்கண நியதி ஒன்றாகிய பொருள் விரிதல் நியமங் காரணமாக எண்ணெயும் தண்ணீரும் எல்லா நெய்யையும் எல்லா நீரையும் பொதுவாகக் குறித்துவரக் காண்கின்றோம்.

எனது ஆராய்ச்சியிற் கண்ட சில செய்திகள்

திரு. T. V. சதாசிவப்பண்டாரத்தார் அவர்கள்
வாணுதுறை உயர்பள்ளி, கும்பகோணம்

(முற்றொடர்ச்சி துணர் 7. மலர் 12. பக்கம் 553)

5. **கோல்லம் ஆண்டின் வரலாறு.** இக்காலத்தில் கிருஸ்த வாப்தம் நம் நாட்டில் வழங்கி வருதல்போல முற்காலத்தில் சகாப்தம், கலியாப்தம் முதலியன வழங்கி வந்தன என்பது கல்வெட்டுக்களாலும் செப்பேடுகளாலும் அறியப்படுகின்றது. மலைமண்டலமாகிய மலையாளதேசத்தில் மாத்திரம் கொல்லம் ஆண்டு முன்னர் வழங்கி வந்ததோடு இன்றும் வழங்கி வருகின்றது. இக்கொல்லம் ஆண்டு எப்போது எவ்வாறு தொடங்கிற்று என்பதைப்பற்றி ஆராய்ச்சிகள் நிகழ்த்திச் சரித்திராசிரியர்கள் ஒரு முடிபிற்கு வந்துள்ளனர். அறுபத்து மூன்று அடியார்களுள் ஒருவரும் சேரநாட்டில் திருவஞ்சைக்களத்தில் வீற்றிருந்து செங்கோல்செலுத்திய முடிமன்னரும் சிவபெருமான்மீது திருக்கைலாய ஞானவுலா, பொன்வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை என்னும் பிரபந்தங்கள் இயற்றியவரும் ஆகிய சேரமான் பெருமாள் நாயனார் சுந்தரமூர்த்தி சுவாமிகளோடு கைலாயஞ் சென்றது கி. பி. 825ஆம் ஆண்டில் நிகழ்ந்த நிகழ்ச்சி என்பதும் அது முதல் தான் கொல்லம் ஆண்டு மலையாளதேசத்தில் வழங்கத் தொடங்கிற்று என்பதும் அன்னோரது முடிபுகளாகும்.* ஆனால், மலைநாட்டில் வரையப்பட்டுள்ள கல்வெட்டுக்களைப் படித்துப் பார்த்தால் கொல்லம் ஆண்டின் வரலாறு அஃது அன்று என்பது நன்கு வெளியாகின்றது. அன்றியும்,

* தமிழ் வரலாறு (திரு. ராவ்பகதூர் K. S. சீனிவாசபிள்ளை) பிற்பாகம், பக்கம் 64.

கொல்லம் ஆண்டு தோன்றியமைக்குக் காரணமும் அக்கல்வெட்டுக்களால் புலனாகின்றது. அவற்றுள் இரண்டு கல்வெட்டுக்களை அடியிற்காண்க.

I. (1) ஸ்வஸ்திஸ்ரீ கொல்லந்தோன்றி யிருநூற்றைம்பத்திரண்டாமாண்டு நாஞ்சி நாட்டதியனூரான அழகிய பாண்டியபுரத்து கண்ணன்தேவனான உத்தமபாண்டியச் சிலைசெட்டியேன் இந்நகரத் (2) தே............விலை கொண்டுடைய பூமிகொட்டியார் குளத்தில் தெற்கடைந்த நெடுங்கண்ணும் மேலைத்தடியும் பேய்கோட்டில் நீர் பாய்கிற காலுக்கு வடக்கும் பிராயோடு குழிக்கு மே(3)ற்கும் மாப்பாண்டி வயக்கலுக்கு தெற்கும் இந்நான் கெல்லைக்குட்பட்ட பூமி இந்நகரத்துபவித்திர மாணிக்க விண்ணகரெம்பெருமானுக்கு நித்தம் நாழி அரிசி திருவமுதுக்கு சந்திராதித்தவரை செல்வதாக வைச்சு கொடுத்தேன் கண்ணன் (4) தேவனான உத்தம பாண்டியச் சிலைசெட்டியேன்.

(Travancore Archaeological Series Vol. III p. 57.)

II. (1) ஸ்வஸ்திஸ்ரீ கொல்லந் தோன்றி இருநூற்றுத் தொண்ணூற்றொன்பதாமாண்டு மிதுனத்தில் வியாழன் நின்ற ஆண்டு நாஞ்சி நாட்டதியனூரான அழகிய பாண்டியபுரத்து நகரத்தோம் இந்நகரத்து திருமேற்கோயில் பவித் (2) திர மாணிக்க விண்ணகரெம்பெருமானுக்கு இந்நகரத்தோம் சந்திராதித்தவரை செல்வதாக நீர் வார்த்துக்கொடுத்த நிலமாவது [11] இந் நகரத்துப் புறவிளாகத் தூவச் செய்யும் கோன் கேரளன் திருத்துக்கும் இந்நிலத்துக்கும் பெருநான் கெல்லை கிழெல்லை இடைக் கோ (3) ட்டில் நின்று அணைக்குப் போகிற வழிக்கும் படாபாறைக்கு மேற்கும் தென்னெல்லை அய்யன்கோயிலுக்குஞ் சாலார் விளாகத்தில் நின்று இறங்குகிற ஆற்றுக்கும் படாபாறைக்கும் வடக்கும் ஆற்றுக்கு கிழக்கும் வடவெல்லை ஆற்றுக்கு தெற்கும் இவ்விசைந்த பெரு நான் கெல்லைக்குட்பட்ட (4) தூவச்செய்யும் திருத்தின பள்ளக் காலால் நீர் பாயும் நிலமுமுட்படக் கொடுத்த நிலம் பதின் மூன்று மாவுக்கும் ஊர்க்காலால் மாத்தால் எழு கல நெல்லும்

காற் காசும் கடமையிறுப்பானாக இந்நகரத்துக் கோன் கேரள னுக்கு இந்நிலம் அட்டிப் பெற்றுக் காராண்மையாக நீரோடு மட் (5) டிக் கொடுத்தோம் அழகிய பாண்டியபுரத்து நகரத் தோம், கோன் கேரளனுக்கு [11] இக்கடமை கோயிலி லிட் டளந்து கொடுப்பது. [11]

(Travancore Archaeological Series Vol. III p. 58.)

இக்கல்வெட்டுக்களால் புதிய கொல்லம் அமைக்கப்பெற்ற ஆண்டு முதல் தான் கொல்லம் ஆண்டு வழங்கத் தொடங்கிற்று என்பது நன்கு அறியக்கிடக்கின்றது.

இனி, 'செந்தமிழ் சேர்ந்த பன்னிருநிலத்தும் தங் குறிப் பினவே திசைச்சொற் கிளவி' என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தின் உரையில் தெய்வச்சிலையார் கூறியிருப்பது கொல்லத்தைப் பற்றிய சில செய்திகளை இனிது புலப்படுத்து கின்றது. அது 'பன்னிரு நிலமாவன:—குமரியாற்றின் தென் கரைப்பட்ட பழந்தீபமும் கொல்லமும் கூபகமும் சிங்களமும், சையத்தின் மேற்குப்பட்ட கோங்கணமும் துளுவமும் குடகமும் குன்றகமும், கிழக்குப்பட்ட கருநடமும் வடுகும் தெலுங்கும் கலிங் கமும் என்றுகொள்ளப்படும். இவற்றுள், கூபகமும் கொல்லமும் கடல்கொள்ளப்படுதலின் குமரியாற்றின் வடகரைக்கண் அப்பெய ரானே கொல்லமெனக் குடியேற்றினர் போலும்':— என்பதாம். (1) நம்தமிழ்மொழியில் கலந்து வழங்கும் திசைச்சொற்கள் எவ் வெந்நாடுகளிலிருந்து வந்துள்ளன என்பதை விளக்கவந்த உரை யாசிரியராகிய தெய்வச்சிலையார், குமரியாற்றின் தென்கரையில் கொல்லம் என்னும் நாடுமுன்னர் இருந்தது என்றும், அதனைக் கடல்கொண்ட பின்னர் அவ்வாற்றிற்கு வடக்கே புதிய கொல் லத்தை அமைத்து, மக்கள் அங்குக் குடியேறினர் என்றும், நுண்ணிதின் ஆராய்ந்து எழுதியிருப்பது அரியதோர் உண்மைச் செய்தியாகும். எனவே, இப்போதுள்ள கொல்லத்தைப் புதி தாக அமைத்து மக்கள்குடியேறிய காலத்தில்தான் கொல்லம் ஆண்டும் முதலில் வழங்கத் தொடங்கிற்று என்பது உறுதி யெய்துதல் காண்க. இவ்வுண்மையைக் 'கொல்லந் தோன்றி இருநூற் றைம்பத்திரண்டாம் ஆண்டு' என்ற கல்வெட்டுத் தொடர்மொழிகள் வலியுறுத்திநிற்றல் உணரற்பாலதாகும்.

---

(1) தொல்காப்பியம் சொல்லதிகாரம் தெய்வச்சிலையார் உரை-பக்கம். 219

கி. பி. 822ஆம் ஆண்டில் நிகழ்ந்த ஒரு கடல் கோளால் பழைய கொல்லம் அழிந்துவிட்டது என்றும் கி. பி. 825ஆம் ஆண்டில் புதிய கொல்லம் அமைக்கப்பட்டது என்றும் துடிசைக்கிழார் திருவாளர் அ. சிதம்பரனார் அவர்கள் எழுதியிருப்பது ஈண்டு அறிந்து கொள்ளுதற் குரியதாகும்.(1) கி. பி. எட்டாம்நூற்றாண்டின் தொடக்கத்திலே சுந்தரமூர்த்தி சுவாமிகளோடு சேரமான் பெருமாள் நாயனார் கைலாயஞ் சென்றனர் என்பது ஆராய்ச்சியால் அறியப்படுதலின்(2) அக்காலத்தில் கொல்லம் ஆண்டு தொடங்கியிருத்தற்கு ஏது சிறிதும் இல்லை என்க.

6. **ஒரு பழைய வழக்கம்.** இக்காலத்தில் இயற்பெயருக்கு முன்னர் மகாராஜராஜஸ்ரீ என்பதை மரியாதைக்கு அறிகுறியாகச் சேர்த்து எழுதுகின்றனர். நமது தமிழன்னைக்குத் தொண்டுபுரிவதில் முன்னணியில் நிற்கும் **கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார்** இயற்பெயருக்கு முன்னர் மரியாதைக்கு அறிகுறியாகத் திருவாளர் என்பதை முதலில் எழுதத்தொடங்கி இதனை வழக்கத்திற் கொணர்ந்தனர். இங்ஙனம் எழுதும் முறை நம்தமிழகத்தில் யாண்டும் பரவி இதுபோது நிலைபெற்றுய்த்துள்ளது. இவ்வாறு முற்காலத்திலும் எழுதிவந்தனர் என்பது ஒருபழைய கல்வெட்டால் புலப்படுகின்றது. அஃது அடியில் வருமாறு:—

(1) "ஸ்வஸ்திஸ்ரீ கோமாறவன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் சோணாடுகொண்டு அருளிய சுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு ௩-ஆவது தென்கோனாட்டுக் குன்றுசூழ் நாட்டுச் சிகாநல்லூர் திருவாளன் சோழமூவேந்த வேளானும் திருவுடை(2)யான் கோதண்டனும் சுந்தன் கொழுந்தும் சுந்தன் கணியும் நம்பி கொழுந்தும் நம்பி பன்மனும் பொன்னன் ஒன்றுயிரமுடையானும் இவ்வனைவோம் எங்கள் கீழைப் புன்செய் விலைக்குற விற்கக் கொள்விருளிரோவென்று ஒருகாலாவதும் இருகாலா(3)வதும் முக்காலாவது முற்கூறப் பிற்கூறி

---

(1) செந்தமிழ்த்தொகுதி 33 பக்கம் 63.
(2) தமிழ்ப்பொழில் துணர் மூன்றில் யான் எழுதியுள்ள 'சுந்தரமூர்த்தி [களது காலம்' என்ற கட்டுரையைப் பார்க்க.

சோழபாண்டிய வளநாட்டு ஆற்றூருடையான் நம்பி பொன்னம் பலக்கூத்தனென உடையார் காங்கேயராயர் கொள்வேனென்று அருளிச்செய்ய முன் சொல்லப்பட்ட இவ்வனைவரோம் நாங்கள் விற்கிற பு(4)ன்செய்க்குப் பெருநான்கெல்லை யாவன கீழ்பாற் கெல்லை மேல்மணநல்லூர் ஊர்ப்பொது எல்லைக்கும் மேற்கும் தென்பாற்கெல்லை திருவாளன் சோழ மூவேந்த வேளான் செய்க்கு வடக்கும் மேற்பாற்கெல்லை சுந்தன்கொழுந்து நம்பி கொழுந்(5)து திருவன் சோழமூவேந்தவேளான் இவர்கள் செய்க்குக்கிழக்கும் வடபாற்கெல்லை பொன்னன் ஒன்றாயிரமுடையான் சுந்தன் கொழுந்து நம்பிகொழுந்து இவர்கள் புன்செய்க்கு தெற்கும் ஆக இசைந்த பெருநான்கெல்(6)லைக்கு உட்பட்ட புன் செய்விற்றுக் கொடுத்து எம்மில் இசைந்த விலைப்பொருள் அன்றாடு நற்பழங்காசு உ௦ இப்பழங்காசு இரண்டரையும் ஆவணக் களத்தே காட்டேற்றி கைச்செலவறக் கொண்டு விலைப்பிர மாணம் பண்ணிக்கொடுத்தோம் (7) உடையார் காங்கேயராயர் பிள்ளைக்கு திருவன் சோழமூவேந்தவேளானும் திருவுடையான் கோதண்டனும் சுந்தன் கொழுந்தும் சுந்தன்கணியும் நம்பி கொழுந்தும் நம்பிபன்மனும் (8) பொன்னன் ஒன்றாயிரமுடையானும் இவ்வனைவோமும் பன்மாகேஸ்வரரட்சை."

(புதுக்கோட்டை நாட்டுக் குடுமியான் மலைக் கல்வெட்டு.)

இக்கல்வெட்டு, முதல்மாறவர்மன் சுந்தர பாண்டியனது ஆட்சிக்காலத்தில் கி.பி. 1219ஆம் ஆண்டில் வரையப்பெற்றது. இதில் இரண்டிடங்களில் திருவாளன் சோழமூவேந்த வேளான் என்றும் இரண்டிடங்களில் திருவன்சோழமூவேந்த வோளான் என்றும் வந்திருத்தல் அறியத்தக்கது. இக் கல்வெட்டில் ஒருவனையே ஓரிடத்தில் திருவாளன் என்றும் மற்றோரிடத்தில் திருவன் என்றும் கூறியிருத்தலால் இவ்விரண்டும் மரியாதைக் குரியனவாக முற்காலத்தில் வழங்கப் பெற்றிருத்தல் வேண்டும் என்பது வெளிப்படை. அன்றியும் மற்றொருவனைத் திருவுடையான் என்று இரண்டிடங்களில் குறித்திருப்பது ஈண்டு உணரற் பாலதாகும். எனவே, முற்காலத்தில் மரியாதைக்குரிய அடைமொழிகளாக இப்பெயருக்கு முன்னர்ச் சேர்த்து வழங்கப்

பெற்றவை திருவாளன், திருவன், திருவுடையான் முதலியன என்பது இக்கல்வெட்டால் நன்கு வெளியாதல் காண்க. இவற்றுள், நமது கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் வழக்கிற்கொணர்ந்து நிலைபெறச்செய்துள்ள திருவாளர் என்பது பழையகாலத்திலும் இதே பொருளில் வழங்கி வந்தமை அறிந்து மகிழ்தற்குரியதாகும்.

7. காயம். இந்நாளில் காயம் என்னுஞ்சொல் பெருங்காயம் Asafoetida) என்ற பொருளில் வழங்கி வருகின்றது. பழைய தமிழ்நூல்களில்பயின்றுவரும் அச்சொல் இப்பொருளையுணர்த்தவில்லை. எனவே, அச்சொல்லுக்கு இப்பொருள் உலக வழக்கில் மாத்திரம் இக்காலத்தில் இருந்து வருதல் உணரத்தக்கது. 'படைகொண்டார்' என்றுதொடங்கும் 253ஆம் குறட்பாவின் விசேடவுரையில், 'சுவைப்பட வுண்டல் காயங்களான் இனிய சுவைத்தாக்கி யுண்டல்' என்று ஆசிரியர் பரிமேலழகர் கூறியுள்ளனர். இதனால் இனிய சுவையைக் கொடுத்தற்குக் காயங்கள் சேர்க்கப்படுதல்வேண்டும் என்பது வெளியாகின்றது. அன்றியும்,

> 'இடம்பட மெய்ஞ்ஞானங் கற்பினு மென்றும்
> அடங்காதா ரென்று மடங்கார்—தடங்கண்ணாய்
> உப்பொடு நெய்பால் தயிர்காயம் பெய்தடினும்
> கைப்பறு பேய்ச் சுரையின் காய்' என்னும்

நாலடியாரில் வந்துள்ள காயம் என்ற சொல் இனிய சுவையைத் தரும் பொருள்களையே உணர்த்துதல் காண்க. இப்பாடலுக்கு உரை எழுதியவர்கள், 'பேய்ச்சுரைக்காய்கள் உப்பும் நெய்யும் பாலும்தயிரும் காயமும் போட்டுச்சமைத்தாலும் கசப்பு நீங்காதனவாம்' என்று வரைந்திருத்தலால் அன்னோர் காயம் என்பதின் பொருளை விளக்கிக் கூறினரில்லை. ஒருகால், அதனை அவர்கள் பெருங்காயம் என்று கருதிப்பொருள் கூறாமல் விட்டிருத்தலுங்கூடும்; ஆனால், ஆசிரியர்பரிமேலழகர் அங்ஙனம் கருதவில்லை என்பது காயங்கள் என்று பன்மையில் கூறியிருத்தலால் பெறப்படுகின்றது. நாலடியார் எழுதப்பெற்ற காலத்தில் இந்நாளிலுள்ள பெருங்காயம் இல்லை என்பது திண்ணம். ஆகவே,

நாலடியாரின் ஆசிரியரும் பரிமேலழகரும் கொண்ட பொருள் யாது என்பது ஈண்டு ஆராய்தற்குரியதாகும். இனி; திருநெல்வேலி ஜில்லாவில் திருச்செந்தூரிலுள்ள ஒரு கல்வெட்டு, காயம் என்பதின்பொருளை மிகத்தெளிவாக உணர்த்துகின்றது, அஃது அடியில்வருமாறு:—

(41)...............'காயம் மிளகமுது(42)மஞ்சளமுது சீரகவமுது சிறுகடுகேமுது (43) கோத்தமலிஅமுது ஏற்றிக் காயம் ஐந்து இவை ஒருபோதைக்கு முச்செவிடாக நான்குபோதைக்குக் காயம் உழக்கே இருசெவிடு'

(Tiruchendur Inscription of Varaguna Maharaja II; Epigraphia Indica Vol XXI No. 17.)

இக்கல்வெட்டினால் காயங்கள் ஐந்துள்ளன என்பதும் அவை மிளகும் சீரகமும் மஞ்சளும் சிறுகடுகும் கொத்தமல்லியுமாம் என்பதும் நன்கு புலப்படுகின்றன. 'காய மிளகமுது' எனவும் 'காயம் ஐந்து' எனவும் இக்கல்வெட்டில் வந்துள்ளமையால் இவ்வைந்தனுள் ஒவ்வொன்றையும் காயம் என்று முற்காலத்தார் வழங்கி வந்தனர் என்பது தெள்ளிதின் உணரப்படும். எனவே, நாலடியாரின் ஆசிரியரும் பரிமேலழகரும் காயம் என்பதற்குக் கொண்டபொருள் மேலே குறித்துள்ள கல்வெட்டினால் விளக்கமுறுதல் காண்க.

8. **சாத்தனூரும் திருவாவதுதுறையும்.** சோழமண்டலத்தில் சாத்தனூர் என்ற ஊர் ஒன்றுளது. இதுவே அறுபத்து மூன்று அடியார்களுள் ஒருவராகிய திருமூல நாயனார் வாழ்ந்த தலமாகும். இதற்கு அண்மையில் திருவாவடுதுறை என்ற தலம் உளது. இது திருஞானசம்பந்த சுவாமிகளுக்குச் சிவபெருமான் ஆயிரம் பொன் அடங்கிய பொற்கிழி யொன்றை அளித்தருளிய தலமாகும். இங்குள்ள ஒரு கல்வெட்டு * இவ்வாலயத்தின் பெயரே திருவாவடுதுறை என்றுணர்த்துவதோடு இஃது அமைந்துள்ள ஊர் சாத்தனூர் என்றும் கூறுகின்றது. எனவே,

* Inscription No. 117 of 1925.

சாத்தனூர் என்னும் திருப்பதியிலுள்ள சிவாலயமே திருவாவடுதுறை என்னும் பெயருடன் முற்காலத்தில் நிலவிற்று என்பது ஒருதலை. இதனை வலியுறுத்தும் மற்றொருசான்றும் சேந்தனார் பாடியுள்ள திருவிசைப்பாவில் திருவாவடுதுறைப் பதிகத்தில் உளது. அஃது,

ஒழிவொன்றிலாவுண்மை வண்ணமும் உலப்பிலளு றின்ப
[வெள்ளமு
மொழிவொன்றிலாப் பொன்னித்தீர்த்தமு முனிகோடி
[கோடியாமூர்த்தியும்
அழிவொன்றிலாச்செல்வச்சாந்தையூர்அணியாவடுதுறையாடினள்
இழிவொன்றிலா வகையெய்தினின் றிறுமாக்கு மென்னிள
[மானனே,—என்பதாம். இப்பாடலில் வந்துள்ள சாந்தை என்பது சாத்தனூர் என்பதின் மரூஉ ஆகும். 'சாந்தையூர் அணியா வடுதுறை' என்னுந் தொடர்மொழிகள் சாத்தனூரில் உள்ளது ஆவடுதுறை என்னுந் திருக்கோயில் என்பதை விளக்கி நிற்றல் ஈண்டு அறிதற்குரியதாகும். சமய குரவர்களது தேவாரப்பதிகங்களை ஆராயின், சில திருப்பதிகளிலுள்ள திருக்கோயில்களுக்குத் தனிப் பெயர்கள் இருத்தல் புலனும். காவிரிப்பூம்பட்டினத்துத் திருக்கோயில் பல்லவனீச்சுரம் எனவும், கோவந்த புத்தூரிலுள்ள திருக்கோயில் விசயமங்கை எனவும், கருவூரிலுள்ள திருக்கோயில் ஆனிலை எனவும், சாத்தமங்கையிலுள்ள திருக்கோயில் அயவந்தி எனவும் பெயரெய்தியிருத்தலைத் தேவாரப் பதிகங்களால் அறியலாம்.

பிற்காலத்தில், சில ஊர்களில், திருக்கோயிலின் பெயர் அதனைச் சூழ்ந்துள்ள ஊர்ப்பெயராக மாறி வழங்கப்பெற்று வருகின்றது. ஊரின் எஞ்சிய பகுதிமாத்திரம் பழைய பெயருடன் நின்று நிலவுவதாயிற்று. இதற்கு எடுத்துக் காட்டாகப் பழையாறை நகரை எடுத்துக்கொள்ளலாம்; பழைய காலத்தில், இது மிகப் பெரிய நகரமாயிருந்தது. பல்லவர், சோழர் முதலான அரசர் குடும்பத்தினர் இந்நகரில் வதிந்து வந்தனர் என்பது பல கல்வெட்டுக்களால் புலப்படுகின்றது. பட்டீச்சுரம், திருச்சத்திமுற்றம், திருமேற்றளி, வடதளி, தென்றளி

என்பன இந்நகரத்திலிருந்த திருக்கோயில்கள் ஆகும். இவற்றுள், பட்டீச்சுரம், திருச்சத்திமுற்றம் என்பவை தனித்தனி ஊர்களாக இந்நாளில் வழங்கப்பட்டு வருகின்றன. திருமேற்றளி என்ற திருக்கோயிலின் பெயர் 'திருமத்தடி' என்ற ஊர்ப் பெயராக மாறிப் போயிற்று. அன்றியும், இது இக்காலத்தில் தனி ஊராக உள்ளது. இவைகளுக்கு அணித்தாகப் பழையாறை நகர் இந்நாளில் ஒரு சிற்றூராக இருக்கின்றது, பழையாறை நகரிலிருந்த பட்டீச்சரமும் திருச்சத்தி முற்றமும் திருமேற்றளியும் வேறுவேறு ஊர்களாயினமைபோல, சாத்தனூரிலிருந்த திருக்கோயிலாகிய திருவாவடுதுறை என்பதும் ஒரு தனி ஊராகப் பிற்காலத்தில் வழங்கிவருதல் அறியத்தக்கது. திருவாவடுதுறை என்னும் பெயரும் இத்திருக்கோயிலைச் சூழ்ந்துள்ள சாத்தனூரின் ஒரு பகுதிக்கு மாத்திரம் வழங்கப் பெற்றுள்ளமையின், எஞ்சிய பகுதி சாத்தனூர் என்னும் பழைய பெயருடன் இதற்கு அண்மையில் இன்றும் நிலைபெற்றிருத்தல் உணரற்பாலதாகும்.

மதிப்புரை

பொருளாதார நூல் நாணயமாற்று நாணயம் இந்தியாவின் கிராமப்பொருள்நிலை கிராமச் சீரமைப்பு	இவை மதுரை அமெரிகன் கல்லூரியில் பேராசிரியராயிருக்கும் திரு. J. S. பொன்னையா அவர்கள் M.A. Dip. Econ. F. R., E. S.

இயற்றியவை. பொருள்நூற்கலையில் புலமை நிரம்பிய ஆசிரியர், தமது ஆராய்ச்சியிற்கண்ட நுண்பொருள்களை உலகியலுடன் பொருத்தி எளிய நடையில் தமிழ்மக்கள் உணருமாறு எழுதி வழங்கியது தமிழ்நாடு போற்றுதற்குரிய அருஞ்செயல்.

மேனாட்டுக்கலைகளை அங்கிலத்துறையில் பயின்று பட்டம் பெற்ற புலவர்கள் தாய்மொழிப் பயிற்சியைப் புறக் கணிப்ப

தால், தமது அருங்கலைகளின் நுண்மாண் பொருள்களைப் பிறர் உணருமாறு கூறவழியில்லாது தடுமாறுவதன்றி, அன்னார் செய்துவரும் முயற்சிகளும் நீர்க்குள் பாசிபோல் வேர்க்கொள்ளாது, மணலில் உழவேபோன்று அவமே பாழ்படுகின்றன. அங்கிலக் கலைஞர்கள் இக்குறையினால் எய்திவரும் பழியைத் துடைப்பார் போன்று, தோன்றிய இப்பேராசிரியரவர்களை ஊக்குதற்பொருட்டு தமிழ் மக்கள் அனைவரும் இந்நூல்களைக் கற்கவேண்டும். தமிழ் நாட்டிலுள்ள கல்லூரிகளிலும், நூல்நிலையங்களிலும், படிப்பிடங்களிலும் இவற்றைப் பல்லாற்றானும் ஆதரிக்கவேண்டும்.

இந்தியரின் பொருளாதாரநிலை செழுமையுறவேண்டுமென்றும், கிராமங்களைச் சீர்பெற அமைத்து அங்குள்ள மக்களை வளம்பெற வாழ்விக்க வேண்டுமென்றும் கிளர்ச்சிகள் மலிந்த இற்றைநாளில் பேராசிரியர் அவர்கள் இத்தகைய நூல்களை நல்கியது காலத்தினாற் செய்த பேருதவியாகும்.

உ

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

கல்லூரிக்கு அன்பர்கள் உதவிய "ஐப்பசி" நன்கொடை.

திங்கள் நன்கொடை		ரூ.	அ.	ப.
திரு. சித்த வைத்திய சரபம் Dr. ஆ. சோதிபாண்டியன்	அவர்கள்	5	0	0
,, நே. அ. அனந்தவிசய முதலியார்	,,	1	8	0
,, T. S. சபாபதி பிள்ளை B.A., (Retired. Dt. Registrar.)	,,	1	0	0
,, K. பிரணதார்த்திகரன் பிள்ளை (மணிகை)	,,	1	4	0
,, L. மார்க்கசகாயம் பிள்ளை B.A., (Secretary, West Tanjore Dt. Board.)	,,	2	0	0
,, K. நடராசன் B.A., B.L.,	,,	5	0	0
,, R. விசுவநாதன்	,,	0	4	0

ஆண்டு நன்கோடை		ரூ.	அ.	ப.
திரு. இராவ்சாகிபு த. வே. உமாமகேசுவரன் பிள்ளை B.A., B.L., அவர்கள்		10	0	0
,, ச. விசுவநாத பிள்ளை (Merchants Bank, Secretary.)	,,	5	0	0
,, T. A. வாசுதேவ பிள்ளை B.A., (Retired Dt. Registrar.)	,,	5	0	0
,, T. S. சபாபதி பிள்ளை B.A., (Retired Dt. Registrar.)	,,	2	0	0
,, க. அருணாசலம் பிள்ளை (Clerk, Dt. Board Office.)	,,	2	0	0
,, நே. அ. வர்த்தமான முதலியார்	,,	2	0	0
,, இராவ்சாகிபு Dr. V. P. நாயுடுகாரு (New Town.)	,,	2	0	0
,, P. V. ராமு அய்யர் (கிருஷ்ண விலாஸ்)	,,	1	0	0
,, A. பக்கிரிசாமி பிள்ளை (மளிகை)	,,	1	0	0
,, J. அய்யாத்துரை நாயனார்	,,	1	0	0
,, பம்பாய் M. S. மணிஅய்யர்	,,	1	0	0
,, வி. சு. சிதம்பரம் பிள்ளை	,,	1	0	0
,, S. சுயம்பிரகாசம் B.A., B.L., (வக்கீல்)	,,	1	0	0
,, T. S. ராமச்சந்திர ராவ் (Railway Contractor.)	,,	1	0	0